Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

SATURDAY, NOVEMBER 13, 2021

சனிக்கிழமை, 13 நவம்பர் 2021 | ஒளி: 07 கதிர்: 152 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

## மக்களின் குறைகளை புரிந்து கொள்ள வேண்டும்



பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் குறைகளைப் புரிந்து கொள்ளாமல், மக்களின் குறைகளைப் புரிந்து கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# பாதை மாறும்

## பட்ஜெட் பெட்டியுடன் வந்த பசில் அறிவித்தார்




மக்களுக்கு சுமை இல்லாத பட்ஜெட்டை தயாரிப்பதில் கவனமாக இருந்தோம் என, தனது முதலாவது வரவு–செலவுத்திட்ட யோசனைகளை பாராளுமன்றத்தில் நேற்று (12) முன்வைத்து உரையாற்றிய நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, “பாதை மாறும்” என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் இரண்டாவது பட்ஜெட்டும் நாட்டின் 76ஆவது பட்ஜெட்டும், பாராளுமன்றத்தில் நேற்று (12) முன்வைக்கப்பட்டது.

பட்ஜெட் யோசனைகளை முன்வைத்து உரையாற்றும் போதே, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பட்ஜெட் யோசனைகள் அடங்கிய பெட்டியுடன் நிதியமைச்சர் சபைக்கு வருவதை கடந்த காலங்களில் காணக்கிடைக்கவில்லை. எனினும், புதிய நிதியமைச்சரான பசில் ராஜபக்ஷ, தனது முதலாவது பட்ஜெட் யோசனைகள் அடங்கிய ஆவணத்தை, பட்ஜெட் பெட்டியில் வைத்தே சபைக்கு எடுத்துவந்தார்.

தொடர்ச்சி P2

- ஓட்டோ, பஸ், பாடசாலை வான்களுக்கு கொரோனா நிவாரணம்
- 24 மாதங்களுக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு நிவாரணப் பொதி
- சிகரெட், மதுபான விலைகள் அதிகரிப்பு
- எம்.பிக்கள் 10 வருடங்கள் பதவியில் இருந்தால் ஒய்வூதியம்
- வற் 18 சதவிதமாக அதிகரிப்பு
- பல துறைகளுக்கும் கொரோனா நிவாரணம்
- அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்கு அதிரடி ஒதுக்கிடு
- 3 வருடங்களில் லயன்களை முற்றாக ஒழிக்க ஒதுக்கிடு
- அரச ஊழியர்களுக்கான எரிபொருள் மானியம் 5 லிற்றரால் குறைப்பு
- கொரோனாவால் சுமார் ரூ.500 பில்லியன் ரூபாய் இழப்பு
- மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்காக சட்டத் திருத்தம்

முழுச் செய்தி P3

### 2022 பட்ஜெட் பற்றாக்குறை

செலவினம்: ரூ. 3,912 பில்லியன்
மொத்த வருமானம்: ரூ. 2,284 பில்லியன்
பட்ஜெட் பற்றாக்குறை: ரூ.1,628 பில்லியன்

## கடல் வழியாக கனடா செல்ல முயன்ற 8 பேருக்கு விளக்கமறியல்

குழுவொன்றை கடல் வழியாக கனடாவுக்கு கடத்த முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில், பிரதான ஆட்கடத்தற்காரர் உட்பட 8 பேரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் மாவட்ட நீதிமன்றம், நேற்று (12) உத்தரவிட்டது.

இம்மாதம் 9ஆம் திகதியன்று சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக கனடாவுக்குச் செல்ல முயன்ற 4 சிறுவர்கள் உட்பட 19 பேர், இலங்கை கடற்படையினரால் சிலாபம் முகத்துவாரத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## போரதீவுப்பற்று பிரதேச சபைக்குள் ஆர்ப்பாட்டம்



வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்று பிரதேச சபை அமர்வின்போது பதாகைகளை ஏந்தியவாறு உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போரதீவுப் பற்று பிரதேச சபையின் 45ஆவது சபை அமர்வு வெல்லாவெளியில் அமைந்துள்ள பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் யோ.ராஜனி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை (12) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## பலத்த மழையால் 2,30,185 பேர் பாதிப்பு

நாட்டின் பல பாகங்களிலும் பெய்துவரும் பலத்த மழையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,30,185 ஆக அதிகரித்துள்ளதென இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

முத்துராஜவெல விவகாரம்

## ஆராய விசேட குழு நியமனம்

முத்துராஜவெல சதுப்பு நிலம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஆராய்வதற்காக, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் பணிப்புரையின் கீழ் எட்டு பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கார்த்திகை 27ஐ எங்களுக்குத் தாருங்கள்

### முன்னாள் புலி உறுப்பினர் ஆணைக்குழுவில் கோரிக்கை



அஷ்ரப் ஏ சமத்

ஒவ்வொரு வருடத்தின் நவம்பர் மாதம் 27ஆம் திகதியையும் விடுதலைப் புலிகளின் முதலாவது உறுப்பினர் மறைந்த தினத்தை நாங்கள் நினைவுகூரக் கேட்கின்றோம். எங்களது உறவினர்கள், சக நண்பர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நாங்கள் விளக்கேற்றி, அதில் விழுந்து அழுது, எங்களது உறவின் கவலைகளை ஞாபகப்படுத்தவே அந்தத் தினத்தைத் தருமாறு அன்பாய் வேண்டுகின்றோம் என, விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

## பட்ஜெட்டை எதிர்த்து ஐ.தே.க ஆர்ப்பாட்டம்

2022ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பொது மக்களுக்கு எவ்வித சலுகையும் வழங்கப்படவில்லையென குற்றஞ்சாட்டி ஐக்கிய தேசிய கட்சி, கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று (12) மாலை எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

தொடர்ச்சி P2



## வெள்ள அபாய எச்சரிக்கை நீக்கம்

பல பிரதேசங்களுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை நீக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்து.

நேற்று (12) நண்பகல் 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் நாடளாவிய ரீதியில் எங்கும் குறிப்பிடத்தக்க மழைவீழ்ச்சி பதிவாகவில்லை எனவும் நிலையம் சுட்டிக்காட்டியது.

தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு பிராந்தியங்களில் உள்ள களனி, களு, அத்தனகல ஓயா, மஹா ஓயா, மல்வத்து ஓயா போன்ற சில ஆறுகளிலும் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

தொடர்ச்சி P2



## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

நிதர்சன் வினோத்

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி, இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் விளக்கமறியல், எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு எதிரான வழக்கு, பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று (12) மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



யுகதனவி விவகாரம்

## முழு அமர்வை கோருகிறார் சட்டமா அதிபர்

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பான ஒப்பந்தங்களை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட பல அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரிப்பதற்காக, ஐந்து அல்லது ஐந்துக்கும் மேற்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் கொண்ட முழுமையான அமர்வு ஒன்றுக்கு உத்தரவிடுமாறு சட்டமா அதிபர், உயர்நீதிமன்றத்தில் நேற்று (12) கோரினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பாதை மாறும்

பட்ஜெட் உரையை செவிமடுப்பதற்காக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் சமூகமளித்திருந்தார். நிதியமைச்சர் சபைக்குள் பிரவேசித்தவேளை, ஆசனங்களிலிருந்து எழுந்து நின்ற ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் "ஜயவே வா" என வெற்றிக்கோஷம் எழுப்பினர்.

முக்கியமான யோசனைகள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம் மேசைகளில் தட்டி, உற்சாகமூட்டினர். விவசாயம் தொடர்பிலான யோசனைகள், முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டபோது, எதிர்க்கட்சியினர் கோஷமெழுப்பி கிண்டல் செய்தனர்.

தனது வரவு- செலவுத்திட்ட முன்மொழிவுகளை வாசித்துக்கொண்டிருந்த நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ , சுமார் 10 நிமிடங்கள் இடைவேளையைப் பெற்றுக்கொண்டு, மீண்டும் உரையாற்றினார். இறுதிப் பகுதியை சபைக்கு ஆற்றுப்படுத்தினார்.

அவரது உரையில், சில முக்கியமான அம்சங்களைத் தொகுத்துள்ளோம்.

சர்வதேச போதைப்பொருள் கடத்தலில், இலங்கையின் முப்படைகள், பொலிஸ் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரச இயந்திரமும் சர்வதேச போதைப் பொருள் மாவியாவுக்கெதிராக துணிச்சலாக போராடிவருகின்றது. அதற்காக நாம் அவர்களுக்கு நன்றிகூறவேண்டும். போதைப்பொருள் கடத்தலுக்கெதிரான போராட்டத்தில் அண்மைக் காலங்களில் தீர்க்கமான நடவடிக்கைகள் மேற்கொண்டவாறு இலங்கை சர்வதேச அங்கிகாரதத்தைப் பெற்றுள்ளது.

நான் சமர்ப்பிக்கின்ற எனது வரவு- செலவுத்திட்ட தொலைநோக்கானது நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து செல்லவேண்டிய சவால்மிக்க பாதையாகும். இது பற்றாக்குறையான வரவு- செலவுத்திட்டப் பாதையொன்று என்பதைவிட மிகவும் ஒழுக்கம்மிக்க அரசநிதி கட்டுப்பாடாகும் என்றார்.

இதனைப் பழக்கப்படுத்திக் கொள்வது முதலில் கடினமானதாக இருக்கலாம். ஆயினும் நாட்டினை, தேசத்தினை அத்துடன் பொருளாதாரத்தினை வலிமைப்படுத்துவதற்கு இதுவே பாதையாகும் என்பதனை நான் உறுதியாக வலியுறுத்துகின்றேன்.

'நல்லொழுக்கம்' அல்லது 'நல்லாட்சி' என அழைக்கப்படும் ஆட்சிக்காலத்தின்போது நாடுசென்ற பாதை ஒருபோதும் நாட்டுக்கு நன்மைபயக்கவில்லை. ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ எதிர்காலத்திற்காக அப்பாதையினை மாற்றுவதற்கு அச்சமின்றி அர்ப்பணித்துள்ளார்.

அப்பாதையினை திசைமாற்றுவதற்கு சேதன விவசாயத்தைக் கொண்ட அத்துடன் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி பொருளாதாரத்தினைக் கொண்ட ஒரு நாட்டில் நாம் கால்பதித்துள்ளோம். நாம் நடைமுறைப்படுத்துகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணத்துறை மாத்திரமன்றி சந்தை தொடர்பு, சுகாதாரம், அரசாங்க சேவைகள், கல்வித்துறை, அபிவிருத்தி என்பவற்றுக்கானதாகும் என்றார்.

உயிர்பல்வகைமையைச் செழிப்படையச் செய்தலும் சுற்றாடல் பாதுகாப்பும் நிலைபெறு தன்மையினை விருத்தி செய்கின்றது. நாட்டின் வரவு-செலவுத்திட்டம், சென்மதி நிலுவைகள், வங்கி அத்துடன் நிதித்துறைகள் இதற்கு ஒன்றுசேர்ந்து பங்களிக்க வேண்டும். உறுதியான சமூகப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு மனிதவள அபிவிருத்தி இலக்காகக் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய அணுகுமுறையினூடாக இறைமையான அரசொன்றை தாபிப்பதற்கான பாதை காணப்படுகின்றது என நான் நம்புகின்றேன் என்றும் நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மக்களின் குறைகளை புரிந்து கொள்ள வேண்டும்

சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது உத்தியோகபூர்வ குடியிருப்புகளின் மின்சாரக் கட்டணம், தண்ணீர்க் கட்டணம், வசதிகள் குறித்து முறைப்பாடு செய்த போதிலும் மக்களின் குறைகள் தொடர்பில் எவரும் பொறுப்பேற்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக புத்தளம் நாத்தாண்டிய பிரதேசத்துக்கு நேற்று (12) விஜயம் செய்தபோதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

பொருட்களின் விலையேற்றம் மற்றும் பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சியால் நாடு முழுவதும் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இருந்த போதிலும் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் மக்கள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையானது செயற்படுவதாகத் தெரியவில்லை எனவும் குறிப்பிட்ட அவர், தாமதமான முடிவுகளை எடுப்பதை விடுத்து பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்ற உடனடியாகவும் திறமையாகவும் தலையிட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் குறிப்பிட்டார்.

# கடல் வழியாக கனடா செல்ல முயன்ற 8 பேருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வத்தளை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை, நீர்கொழும்பு, கொச்சிக்கடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த, 16 ஆண்கள், பெண் ஒருவர், மூன்று சிறுவர்கள் உட்பட 19 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் அனைவரும் சிலாபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, கடந்த 05ஆம் திகதி கடல் வழியாக இழுவை படகுகளில் 5 பேரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 24 பேரும் சிலாபம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோதே மூன்று சிறுவர்களையும் விடுவிக்குமாறு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

ஏனைய 21 சந்தேக நபர்களும் தலா 500,000 ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி உடப்பு பிரதேசத்தில் இருந்து 3 சிறிய படகுகளில், இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு அழைத்துச் சென்றது.

இந்தியப் பெருங்கடலில் வைத்து கப்பல் ஏற்றுவதே கடத்தல்காரர்களின் நோக்கமாக இருந்தபோதும் கப்பல் வராததால், குழுவினரின் பலத்த வற்புறுத்தலால், படகு கடந்த 9ஆம் திகதி கரை திரும்பியது.

குழுவை அழைத்துச் செல்வதற்காக ஒரு வேனைக் கொண்டு வருவதற்கு பிரதான கடத்தற்காரர் ஏற்பாடு செய்திருந்த நிலையிலேயே சாரதி, உதவியாளர் உட்பட 17 பேரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குழுவை இந்தியக் கடற்பரப்பு வரை அழைத்துச் செல்வதற்காக இழுவை படகு பிரதானிக்கு 2 மில்லியன் ரூபாவை வழங்க பிரதான கடத்தல்காரர் ஒப்புக்கொண்டுள்ளார் என விசாரணை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் குழுவை கனடாவுக்கு அழைத்துச் செல்வதற்காக ஒவ்வொருவரிடமிருந்தும் 30 - 35 இலட்சம் ரூபாய் பணத்தை கடத்தல்காரர் பெற்றுக் கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போரதீவுப்பற்று பிரதேச சபைக்குள் ஆர்ப்பாட்டம்

இதன்போது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்து கொண்ட உறுப்பினர்களால் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள தொலைத் தொடர்பு கோபுரங்கள், வீதி மின் விளக்குகள் பொருத்துதல், பழுகாமத்தில் அமைந்துள்ள திண்மக் கழிவகற்றும் இடம், பழுகாமத்தில் அமைந்துள்ள வண்ணான் குளத்தில் மீன்வளர்த்தல், நூலகங்களில் அமைந்துள்ள புத்தகங்கள் காணாமல் போனமை மற்றும் பழுதடைந்துள்ளமை, வெல்லவெளி பொலிஸாரின் நடவடிக்கைகளில் திருப்தியின்மை, பிரதேச சபையின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள இராணுவ சோதனைச் சாவடி, காட்டு யானைகளின் பிரச்சினைகள், உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர்கள் தத்தமது கருத்துக்களை முன் வைத்தனர்.

சபை அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை, உறுப்பினர்கள் வாசகங்கள் எழுத்தப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர். "பருவத்தில் பசளை வழங்கா பயிரும் மண்ணாகும்; பசளை வழங்கா அரசும் வீணாகும்", "சீனி, அரிசி, சீமெந்து, ஆகியவற்றின் விலை அதிகரிப்பை நிறுத்து", "அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பால் அவதியுறும் ஏழை விவசாயிகள்", "பசளை இன்றி பயிர் இல்லை; விவசாயம் இன்றி நாடு இல்லை", "அரசே, அரசே, உரத்தைக் கொடு" உள்ளிட்ட பல வாசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி கோசங்களையும் சபை அமர்வின்போது எழுந்து நின்று இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி உறுப்பினர் சு.விக்னேஸ்வரன் அந்த ஆர்ப்பாட்டத்தைப் புறக்கணித்து கதிரையை விட்டு எழும்பாமல் அமர்ந்தபடியே இருந்தார்.

இறுதியில் மேற்படி பிரதேச சபையின் முன்பாக, பொலிஸ் மற்றும் இராணுவதினர் இணைந்து அமைத்துள்ள சோதனைச் சாவடி, மற்றும் வீதித் தடை ஆகியவற்றை தவிசாளர் உள்ளிட்ட பலரும் பார்வையிட்டனர்.

அவை, பிரதேச சபைக்கு வரும் மக்களுக்கும், அதன் அருகில் உள்ள பஸ் தரிப்பிடத்தில், மற்றும் அதனருகில் அமைந்துள்ள கோவில் ஆகியவற்றும் பெரும் இடைஞ்சலாக இருந்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆட்சி அதிகாரத்ததில் உள்ள போரதீவுப் பற்றுப் பிரதேச சபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு 8 உறுப்பினர்களையும், ஐக்கிய தேசிய கட்சி 3 உறுப்பினர்களையும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 2 உறுப்பினர்களையும், சுயேட்சைக்குழு 2 உறுப்பினர்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணி 1 உறுப்பினரையும், தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி 1 உறுப்பினரையும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 1 உறுப்பினரையும் கொண்டு கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் 23 பேர் சார்பில்,

இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் சட்டத்தரணி லோ.குகதாஸ் ஆஜராகியிருந்தார்.

எல்லை தாண்டிய மீன் பிடியில் ஈடுபட்டமை, தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன் படுத்தக்கூடிய நிலையில் வைத்திருந்தமை, அனுமதி பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்டமை போன்ற மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்திய மீனவர்களுக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி சார்பில் சட்டத்தரணி ஜோய் மகாதேவாவும் ஆஜராகியிருந்தார்.

# வெள்ள அபாய எச்சரிக்கை நீக்கம்

அந்த ஆற்றுப்படுகைகளில் உள்ள தாழ்வான பகுதிகளில் எஞ்சியிருக்கும் வெள்ள நீர் படிப்படியாக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்றையதினம், மேல், சப்ரகமுவ, வடமேல், மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போதுமழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வடமத்திய மாகாணத்தில் பலதடவைகள் மழை பெய்யும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் யாழ்ப்பாணம்மாவட்டத்திலும் சில இடங்களில் 50 மில்ல மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவிய சீரற்ற வானிலையால் 26பேர் உயிரிழந்துள்ளதுடன், 65,580 குடும்பங்ளைச் சேர்ந்த 230,185 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆராய விசேட குழு நியமனம்

சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் டொக்டர் நாலக கொடஹேவா, இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, இராஜாங்க அமைச்சர் டொக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, பாராளுமன்ற உறுப்பினர் நளின் பெர்னான்டோ ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குகின்றர்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, வீரசுமண வீரசிங்க ஆகியோரும் கம்பஹா மாவட்ட செயலாளர் சுனில் ஜயலத்தும் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முத்துராஜவெல சதுப்பு நிலங்களுக்குச் சொந்தமான சுமார் 3,000 ஏக்கர் நிலத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் அண்மையில் வெளியிடப்பட்டது.

எனினும், அது பொதுமக்களின் அதிருப்தியை சந்தித்திருந்த நிலையில், அதன் உள்ளடக்கத்தில் ஏதேனும் மாற்றங்களை முன்மொழிவதற்கு முன்னர், தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளை மதிப்பாய்வு செய்தல் அதன் உள்ளடக்கத்தில் மாற்றங்களை முன்மொழிவதற்கு முன்னர், தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தலில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளை மீளாய்வு செய்வதற்கு இந்தக் குழுவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முழு அமர்வை கோருகிறார் சட்டமா அதிபர்

அரசியலமைப்பின் 132(3) ஆவது பிரிவின்படி, இந்த மனுக்களின் தேசிய முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு மனுக்களை விசாரிக்க ஐந்து அல்லது ஐந்துக்கும் மேற்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் கொண்ட முழுமையான அமர்வுக்கு உத்தரவிடுமாறு சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பர்சானா ஜமீல் கோரிநின்றார்.

அதன்படி, நீதியரசர் புவனேக அலுவிஹார, நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் நீதியரசர் மஹிந்த சமயவர்தன ஆகியோரடங்கிய குழாம், இந்த கோரிக்கையை பிரதம நீதியரசரின் கவனத்துக்குக்கு அனுப்ப தீர்மானித்துடன், நவம்பர் 26ஆம் திகதியை மனுக்களுக்கு ஆதரவு வழங்கும் தினமாக நிர்ணயித்தது.

இதேவேளை, இந்த மனுக்களுக்கு எதிராக வரையறுக்கப்பட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய எதிர்பார்ப்பதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மன்றில் அறிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹதுன்னெத்தி மற்றும் வசந்த சமரசிங்க, கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் மற்றும் வண. எல்லே குணவன்ச தேரர் ஆகியோரே அடிப்படை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

# பலத்த மழையால் 2,30,185 பேர் பாதிப்பு

பாதிக்கப்பட்ட 12,700க்கும் அதிகமானோர் 80 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மழையுடனான வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளதுடன் ஒருவர் காணாமற்போயுள்ளார்.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, வடமேல், மத்திய மாகாணங்களின் சில பகுதிகளில் 75 மில்லி மீட்டர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் காலை நேரத்தில் மழையுடனான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இரவு வேளையில் மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடைக்கிடையே 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இதேவேளை, தெற்கு அந்தமான் தீவு பகுதியில் புதிய தாழமுக்க நிலை நாளை உருவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதனால் கடல்சார் தொழிலாளர்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடற்பிராந்தியங்களில் 2.5 தொடக்கம் 3 மீற்றர் வரை அலை மட்டம் உயரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பட்ஜெட்டை எதிர்த்து ஐ.தே.க ஆர்ப்பாட்டம்

கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன, பொதுச் செயலாளர் ரஞ்சித் பண்டார, தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க, முன்னாள் அமைச்சர் சாகல ரட்ணாயக்க, முன்னாள் எம்.பி சமன் ரத்னப்பிரிய மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

அத்தியாவசியப் பொருட்கள் முதல் நாட்டு மக்களின் சாதாரண வாழ்க்கையில் தாக்கம் செலுத்தும் அனைத்து காரணிகளும் அதிகரித்துள்ளமைக்கு கண்டனம் வெளியிடப்பட்டதுடன், மக்களின் வாழ்க்கைச் சுமை் குறைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென இதன்போது வலியுறுத்தப்பட்டது.

# கார்த்திகை 27ஐ எங்களுக்குத் தாருங்கள்

வடக்கில் வாழும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 7 பேர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முன்னால், ஆஜராகி தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கோரிக்கைகளை முன்வைத்தனர்.

ஆணைக்குழுவின் தலைவரும் உயர்நீதிமன்ற நீதியரசருமான நவாஸ், முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரணிகள் முன்னிலையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (12) ஆணைக்குழுவின் அமர்வு இடம்பெற்றது.

மலைய மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற வீ.இராதாகிருஷ்ணனன், அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் சதிஸ்குமார் ஆகியோர் இந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்: நான் வவுனியாவில் வாழ்கின்றேன். யுத்த காலத்தில் செல் அடிபட்டு கால்களை இழதேன். நான் வவுனியாவில் சில்லறைக்கடை ஒன்றை வைத்து 2 குழந்தைகளையும் வளர்த்து வருகின்றேன். நான் 20 வருடங்களுக்கு முன் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தேன். என்மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கொன்றினை வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் விடுதலையானேன்.
நாம் விடுக்கும் முக்கிய கோரிக்கை என்னவெனில், ஒவ்வொரு வருடத்தின் நவம்பர் மாதம் 27ஆம் திகதியும் விடுதலைப் புலிகளின் முதலாவது உறுப்பினர் மறைந்த தினத்தை நாங்கள் நினைவுகூரக் கேட்கின்றோம் என்றார்.

# 2022 பட்ஜெட் முன்மொழிவுகள்

## அதிரடித் தீர்மானங்கள்

■ அரச உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் மானியம் 5 லீற்றரால் குறைப்பு

■ தொலைபேசி கட்டணங்கள் 25 சதவீதம் குறைப்பு

■ மின்சார கட்டணம் 10 சதவீதம் குறைப்பு

■ புதிய அலுவலக கட்டடங்களை அமைத்தல் இரண்டு வருடங்களுக்கு இடைநிறுத்தம்

■ 5 ஆண்டுகளாக இருந்த எம்.பிக்களின் ஓய்வூதிய எல்லை 10 வருடங்களாக அதிகரிப்பு

■ புகையிரத திணைக்களத்தால் திறம்பட பயன்படுத்தப்படாத காணிகளை கலப்பு அபிவிருத்திக்காக பயன்படுத்த நடவடிக்கை

■ சேதன பசளை உற்பத்தி திறனை அதிகரிப்பது கிராமிய அளவில் மேற்கொள்ளப்படும்

■ அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறும் வயதினை 65 வருடங்களாக நீடிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

## ஒதுக்கீடு

■ வீதி அபிவிருத்திக்கு 20,000 ரூபாய் மில்லியன் ஒதுக்கீடு

■ பல்வேறு காலப்பகுதிகளில் காணாமல் போனவர்களுக்கு நட்டஈடு வழங்க 300 மில்லியன் ரூபாய்

■ ஆசிரியர்-சம்பள முரண்பாட்டை ஒரே நேரத்தில் தீர்ப்பதற்கு, 30 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■ அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களுக்கு நிவாரணம் வழங்க 100 மில்லியனை ஒதுக்கீடு

■ விளையாட்டு அபிவிருத்திக்காக 3,000 மில்லியன் ஒதுக்கீடு

■ விசேட தேவையுடையவர்களுக்கு, முதியவர்களுக்கு 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■ 2 வருடங்களுக்கு கர்ப்பிணிகளுக்கான போசாக்கு பொதி

■ சூழல் பாதுகாப்புகாக்காக 2,000 மில்லியன் ஒதுக்கீடு

■ வனப்பாதுகாப்பக்காக 2,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■ வனஜீவராசிகள் பாதுகாப்புக்காக 1,000 மில்லியன்

■ கிராமிய உட்கட்டமைப்பு, பொது சேவைகளுக்காக 5,300 மில்லியனை ஒதுக்க நடவடிக்கை

■ சுகாதாரம், சுதேச மருத்துவத்தை அபிவிருத்தி செய்ய 5,000 மில்லினை ஒதுக்கீடு செய்ய முன்மொழிவு

■ கொரோனா முடக்க காலத்தில் வருமானத்தை இழந்த பாடசாலை வாகன உரிமையாளர்களுக்கு நிவாரணம் அளிக்க, 400 மில்லியன் ஒதுக்கீடு

■ சேவைகளில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகளை 2022 ஜனவரி மாதம் தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்கவும் 7,600 மில்லியனை ஒதுக்க நடவடிக்கை



## மத வழிபாடு

■ கஷ்டப்பிரதேசங்களிலுள்ள பௌத்த விகாரைகளின் பராமரிப்புக்கு 500 மில்லியன் ரூபாய்

## உடனடி அமல்

■ உடன் அமலுக்கு வரும் வகையில் சிகரட்டின் விலை 5 ரூபாவால் அதிகரிப்பு.

■ மதுவரி உடனடி அமலுக்கு வரும். இன்று மாலை அது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்படும்.

## நிவாரணம்

■ வருமானத்தை இழந்த ஓட்டோ சாரதிகளுக்கு 600 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

■ தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு 1500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

■ நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகர்களுக்கு 500 மிலலியன் ரூபாய் நிவாரணம்

■ நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியின்போது வருமானத்தை இழந்த பாடசாலை வேன் உரிமையாளர்களுக்கு 400 மில்லியன் ரூபா

## பாதுகாப்பு

■ தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை. தீவிரவாதிகள், பிரிவினைவாதிகளுக்கு மேலும் இடமில்லை.

## சமூக நலன்

■ வறிய மக்களுக்கு நிவாரணப் பொதியை வழங்குவதற்காக 15 பில்லியன் ரூபாய்

■ ஓய்வூதியம் பெறாத மூத்த பிரஜைகளுக்கு பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்

■ இளைஞர்களை வேலை தேடுபவர்களுக்கு பதிலாக தொழில் வழங்குனர்களாக மாற்றும் திட்டம்

■ நாடு முழுவதும் தொலைத்தொடர்பு கட்டமைப்பை வரைவில் நிறுவி, நாடு முழுவதிலுமுள்ள 10,115 பாடசாலைகளுக்கும் உரிய தொழிநுட்பத்தை பயன்படுத்தி, அதிவேக இணைய ப்ரோட் பேண்ட் வசதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

■ தொழிலுக்காக வெளிநாட்டு வேலைகளுக்குச் செல்பவர்களின் அறிவுத்திறனை, பயிற்சியை மேம்படுத்த, வெளிநாட்டு தூதுவர்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை அதிகரிக்க முன்மொழிகிறேன்.

■ பிள்ளை மற்றும் உளநலம் தொடர்பில் நிலவுகின்ற அடிப்படைப் பிரச்சனைகளை இனங்கண்டு தீர்க்க நிகழ்ச்சித் திட்டம்

## அரசாங்கத்தின் இயலாமை

■ மக்கள் தொகைக்கு ஏற்ப உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை



## கொரோனா நிர்வாகம்

■ கொரோனாவை ஒழிக்க நாட்டை முழுமையாக முடக்கி மக்களை பாதுகாக்க முடிந்தது

■ தடுப்பூசி நடவடிக்கையில் எமது இலக்கை எட்டியுள்ளோம்

■ கொரோனாவால் சுமார் ரூ.500 பில்லியன் ரூபாய் இழப்பு

## பொருளாதாரம்

■ உற்பத்திப் பொருளாதாரத்துக்கு அதிக முக்கியத்துவம்

■ புதிய தொழிநுட்பத்துடன் கூடிய பெருந்தோட்டங்களை உருவாக்குவது

■ மூலதன உதவிகளை வழங்கி அரச மற்றும் தனியார் துறையினரின் வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான சாளரங்கள் திறபடும்

■ நேரடியான வருமானத்தை ஈட்டுவதற்கு பயன்படாத சொத்துக்களை பயன்படும் வகையில் மாற்றுதல்

■ இலங்கையை முதன்மையான இரத்தினக்கற்கள் கொள்வனவு மய்யமாக மாற்றுவது எமது நோக்கமாகும்.

■ இறப்பர் சார்ந்த உற்பத்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தவும் இறப்பர் சார்ந்த உற்பத்தி தொழிலை ஊக்குவிக்கவும் முன்மொழிகிறேன்

■ ஆடைக் கைத்தொழிலுக்கு தேவையான மூலப்பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை.

■ திரவப்பால் உற்பத்தியை அதிகரிக்க தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாக 1,000 மில்லியன் ரூபாயை ஒதுக்க எதிர்பார்க்கின்றோம்.



## வரிகளும் வாகனங்களும்

■ சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை அறவிட தீர்மானம் அடுத்த வருடம் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து செயலுரு பெறும்

■ விபத்துக்குள்ளாகும் வாகனங்களுக்கு கட்டணம் அறவிட தீர்மானம்

■ இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படாத அனைத்து வாகனங்களையும் விடுவிக்க நடவடிக்கை. இவ்வாறு விடுவிப்பதற்குரிய வரி, அபராதப் பணம் அறவிடப்பட்ட பின்பே விடுவிக்கப்படும்.

■ கட்டணங்கள் மற்றும் சேவைகளை தரப்படுத்துவதில் கவனம் செலுத்தி, முச்சக்கர வண்டித் தொழிலுக்கு ஒழுங்குமுறை அதிகாரசபை அறிமுகப்படுத்தப்படும்.

■ உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ஈட்டப்படுகின்ற 80 சதவீத வருவாய்க்கு வகைகூறுகின்ற பாரிய வரி செலுத்துநர் அலகுகளின் ஒன்றுதிரட்டிய நிர்வாகத்தினூடாக அரசாங்கத்தின் வரி சேகரித்தலினை வலுப்படுத்தல்

## சட்டமும் ஒழுங்கும்

■ மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மீதான சட்டத்தை அறிமுகப்படுத்த முன்மொழிவு

■ வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஏற்றுமதியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சட்டம்

■ விவசாயிகளின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்துகின்ற பசுமை விவசாய அபிவிருத்தி சட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன்

■ நீதிமன்ற நடவடிக்கை மற்றும் நீதிமன்ற டிஜிட்டல் மயப்படுத்தவும் நீதிமன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 5,000 மில்லியன் ரூபாயை ஒதுக்க நடவடிக்கை

■ பொதுமக்கள் பாதுகாப்புக்காக பொலிஸ் நிலையங்களுக்கு 500 மில்லியன்

■ கைதிகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்த 200 மில்லியன் ஒதுக்கீடு

## உட்கட்டமைப்பு மேம்பாடு

■ எதிர்வரும் 3 வருடங்களில் லயக்குடியிருப்புகளை அகற்ற நடவடிக்கை

■ அனைவருக்கும் குடிநீர் வசதி 24 மணி நேரமும் சுத்தமான குடிநீரை வழங்க 15,000 ரூபாய் மில்லியன்

■ மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரண உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்குள்ள தடைகளை நீக்கல்

■ பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் விசேட அடிப்படையில் பயிரிடப்படாத காணிகளை வழங்கி புதிய விவசாய தொழில்முயற்சியாளர்களை உருவாக்கல்

■ சிறிய குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்கள், குளக்கட்டுகள் என்பவற்றின் புனரமைப்புக்கு ரூபா 2,000 மில்லியன் ஒதுக்கீடு

■ பொருளாதார ரீதியாக வறுமை நிலையில் காணப்படும் குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்க 15,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு



## டிஜிட்டல்

■ அரச சேவையினை டிஜிட்டல் மயப்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,500 மில்லியனுக்கு மேலதிகமாக மேலும் ரூபாய் 500 மில்லியன் ஒதுக்கீடு

■ தொலைத் தொடர்பு சேவை சம்பந்தமாக பாரிய முதலீடுகள்

■ மேற்கொள்ளப்படுகின்றமையால் இவ்வாறான அனுமதிப் பத்திரத்தை ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கு முன்மொழிவு

■ தகவல் தொழில்நுட்பக் கலத்தில் உள்ளடக்கப்படவுள்ள 5ஜீ அலைவரிசையை ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு முன்மொழிவு

## அரச நிறுவனங்கள்

■ அரசாங்க சேவை சம்பளங்களில் காணப்படுகின்ற முரண்பாடுகளை அகற்றுவதன் மூலம் அரசாங்க சேவைக்கான புதிய சம்பளக் கட்டமைப்பு ஒன்றினை நிறுவல்

■ அரசுக்கு சொந்தமான ஊடக நிறுவனங்கள் தொழில் மீது கவனம் செலுத்துதல் மற்றும் நிதியியல் ஒழுக்கம் என்பவந்றை உறுதியான அடிப்படையில் மீளாய்வுசெய்தல்

■ புதிய காப்புறுதித்திட்டமொன்றின் கீழ் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வியாபார நுழைவினை விரிவுபடுத்தல்

■ இலங்கைச் சுங்கத்தினால் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்ற எச்எஸ் குறியீட்டு முறைமையினை இற்றைப்படுத்தி சுங்கத் தீர்வைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளை தவிர்த்தல்

■ கிராமிய சமூகத்தின் நிதியியற் தேவைகளை நிறைவேற்றுகின்ற அருகாமையிலுள்ள நிதியியல் சேவை வழங்குநராகக் காணப்படுகின்ற சமுர்த்தி வங்கித் தொழில் இயக்கத்தினை மீள்கட்டமைப்பதற்கும் திட்டம்

■ அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மூலம் வரவுசெலவுத்திட்டம் தயாரித்தல

## விவசாயம்

■ நச்சற்ற களைநாசினி பயன்பாட்டினை ஊக்குவிக்க விவசாயிகளுக்கான நிவாரணம்

■ சேதனப் பசளைப் பாவனையினை ஊக்குவித்தல்

■ புதிய விவசாயத் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல்

■ மலர்கள் மற்றும் இலைவகைகள் பயிர்ச்செய்கைத் துறையில் காணப்படுகின்ற குறைபாடுகளை இனங்கண்டு செய்கையாளர்களுக்குத் தேவையான அறிவை வழங்கல்

‘வருமுன் காப்பதும் வந்த பின்னர் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும்’

# நீரிழிவின் மந்திரம்

நாளை (14) சர்வதேச நீரிழிவு தினமாகும்

பைஷல் இஸ்மாயில் இஸ்மாயில்





நீரிழிவு நோயுள்ள ஒருவர் தனது நோயைக் கட்டுப்பாடாக வைத்திருப்பதற்கு முதலில் அந்நோயைப்பற்றி முழுமையாக நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். அதாவது, நீரிழிவு நோய் என்ன காரணத்தால் ஏற்படுகிறது? அது மனித உடலை எந்த வகையில் பாதிக்கிறது என்பதைப் பற்றிய விளக்கங்களை நோயாளிகள் மட்டுமல்லாது அனைவரும் அறிந்திருத்தல் வேண்டியது இன்றியமையாதது என்கிறார் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டொக்டர் விஷ்ணு சிவபாதம் *MBBS, DCH, MD Paediatrics*. நீரிழிவு நோய் பற்றிய அவருடனான உரையாடலை கேள்வி- பதில் வடிவில் இங்கு தருகின்றோம்.

**கேள்வி: சர்வதேச நீரிழிவு நோய் தினம் நாளை கொண்டாடப்படுகின்றது. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?**

பதில்: நீரிழிவு நோய்பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக 1991 ஆம் ஆண்டு தொடக்கம் உலக சுகாதார ஸ்தாபனத்தால் உலகளாவிய ரீதியில் வருடம்தோறும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி சர்வதேச நீரிழிவு தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. 2019 ஆம் ஆண்டு, உலகளாவிய ரீதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் 463 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும், அதேபோல் குறித்த வருடத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4.2 மில்லியன் பேர் என தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் இத்தருணத்தில் உலக நீரிழிவு தினத்தில், அவர்களைப் பாதுகாத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் சுகாதாரத்துறையினர் பாரிய பங்களிப்பைச் செய்தும் வருகின்றனர்.

வருடம்தோறும் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கையும், உழிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஏனென்றால், எமது வாழ்க்கை முறையில் ஏற்படுத்திக்கொண்ட உணவுப் பழக்கவழக்க மாற்றங்கள் மூலமாகவும், நீரிழிவு போன்ற தொற்றா நோய்களின் எண்ணிக்கையின் அளவும் எமது சமூகத்தில் மிக பாரதூரமாக அதிகரித்துக்கொண்டு செல்வதே இதற்குக் காரணமாக அமைகின்றது. இதிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் வருடம்தோறும் இத்தினம் தொண்டாடப்படுகின்ற அதேவேளை மக்களிடத்தில் நீரிழிவு நோய்பற்றிய விழிப்புணர்வுகளும் செய்யப்படுகின்றன. எனவே, நாம் அனைவரும் நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வை அறிந்துகொள்வதன் மூலம் அதன் தாக்கத்தலிருந்தும் எம்மை பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதும் இதன் நோக்காக இருக்கின்றது.

**கேள்வி: நீரிழிவு ஒரு நோயல்ல என்று சொல்லப்படுகின்றதே; இது பற்றி உங்கள் கருத்தென்ன?**

பதில்: நீரிழிவு நோய் ஒரு நோயல்ல என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், நீரிழிவு ஒரு நோயாகும். இந்த நோய் உடலிலுள்ள பல பாகங்களை பாதிக்கின்ற ஒரு நோயாகக் காணப்படுகின்றது. நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் நீரிழிவுக்குரிய மருந்துகளையோ அல்லது இன்சுலினையோ தொடர்ச்சியாகவும், கிரமமாகவும் பயன்படுத்துவதன் மூலம் சீனியின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும். தவறும் பட்சத்தில் உடலின் பல பாகங்களை செயலிழக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாக வேண்டிவரும்.

நீரிழிவு நோயை வருமுன் காப்பதும், வந்த பின் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் மருத்துவர்களின் பிரதான அறிவுறுத்தலாக இருக்கின்றது. நீரிழிவு நோய் என்பது உடலில் சதயீ எனும் பாகத்திலிருந்து சுரக்கப்படும் இன்சுலினின்



டொக்டர் விஷ்ணு சிவபாதம்

அளவு குறைவதினாலோ அல்லது அவ்வாறு சுரக்கப்படும் இன்சுலினுக்கு உடற்பாகங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதாலேயோ ஏற்படும் ஒரு நோயாகும்.

நீரிழிவு நோயை முக்கியமாக இரண்டு வகையாக வகைப்படுத்தலாம். அதன் முதலாவது வகை, உடலிலிருந்து சுரக்கப்படும் இன்சுலினின் அளவு குறைவதால் ஏற்படுகின்றது. இரண்டாவது வகை, இன்சுலினின் தொழிற்பாட்டிற்கு உடலில் காணப்படுகின்ற எதிர்ப்பினால் ஏற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக கர்ப்பகாலங்களில் ஏற்படுகின்ற நீரிழிவு நோய், சில மருந்துவகைகளினால் ஏற்படுகின்ற நீரிழிவு நோய் என பல விதமான நீரிழிவு நோய்களும் எம்மைத் தாக்குகின்றன.

**கேள்வி: பெரியவர்களைவிட சிறுவர்கள் இந்த நோய் பாதிப்புக்குள்ளாகக் காரணம் என்ன?**

பதில்: நீரிழிவு நோய் பெரியவர்களை பாதித்தாலும் அது சிறுவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். சிறுவர்களுக்கு முதலாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோயே அவர்களை பாதிப்படையச் செய்கின்றது. பொதுவாக, அவர்களில் ஏதோ ஒரு காரணத்திற்காக சுரக்கப்படுகின்ற இன்சுலினின் அளவு குறைவடைவதால் அவர்களுக்கு இந்த முதலாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோய் ஏற்படுகின்றது.

அதிகளவு உடற்பருமனால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இரண்டாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோய்த்தாக்கம் ஏற்படுகின்றது. அன்மைக்காலங்களில் அதிகரித்த எண்ணிக்கையில் இரண்டாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோய் சிறுவர்களைத் தாக்குகின்றது. அதாவது, சிறுவர்களின் அதிகரித்த உடற்பருமனால் இன்சுலின் ஓமனுக்கு எதிரான தன்மையை வெளிப்படுத்தும்போது அவர்களை இந்த இரண்டாவது வகை நீரிழிவு நோய் தாக்குகின்றது. இது பெரியவர்களுக்கு ஏற்படும் நோய் வகையைச் சார்ந்ததாகும். வளரும் குழந்தைகள் மிக நீண்ட காலத்திற்கு நீரிழிவு நோயுடன் போராட வேண்டியுள்ளாதால் அவர்களுக்கு நீரிழிவு நோயினால் ஏற்படும் பாதிப்புக்களும் அதிகரித்து காணப்படுகின்றது.

நீரிழிவு நோய் ஒருவரிடம் அடையாளப்படுத்தப்பட்ட பின்பு அவை முற்றுமுழுதாக குணப்படுத்துவது சற்று சவாலான விடயமாகும். ஆனாலும் மருந்துகளையும் உணவுப்பழக்க வழக்கங்களையும் உடற்பயிற்சிகளையும் மேற்கொள்ளும்போது எமது உடலில் காணப்படுகின்ற சீனியின் அளவை ஒரு சீரான நிலையில் பேணுவதன் மூலம் நீரிழிவு நோயால் ஏற்படுகின்ற பக்கவிளைவுகள் அல்லது பாதிப்புகளில் இருந்து விடுபடலாம்.

**கேள்வி: நீரிழிவு நோயாளிகள் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்?**

பதில்: ஒருவர் நீரிழிவு நோயாளியாக அடையாளப்படுத்தப்பட்ட பின்னர் அவரின் உடலிலுள்ள சீனியின் அளவை சீரான நிலையில் பேனுதல் வேண்டும். அதற்காக வைத்தியரினால் பரிந்துரைக்கப்படுகின்ற உணவுப்பழக்க வழக்கங்களையும் மருந்து வகைகளையும் கிரமமாக எடுப்பதன் மூலமும், உடற்பயிற்சி போன்றவற்றை செய்வதன் மூலமும், நீரிழிவு நோயுடன் சேர்ந்து காணப்படுகின்ற உயர்குருதியமுக்கம், அதிக கொழுப்பு போன்ற நோய் நிலைமைகளுக்கு சீரான மருந்துகளை எடுப்பதன் மூலமும், நீரிழிவு நோயினால் ஏற்படுகின்ற நீண்டகால பாதிப்புக்களை தவிர்த்துக்கொள்ளலாம். அல்லது நீண்டகால பாதிப்புக்கள் மிக விரைவாக எம்மைத் தாக்குவதை தாமதப்படுத்தலாம்.

**கேள்வி: சிறுவர்களுக்கு எவ்வாறான சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுகின்றது?**

பதில்: முதலாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இன்சுலினை எடுத்துக்கொள்வது மட்டுமே ஒருயொரு சிகிச்சை முறையாக மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது, அவர்களின் உடலில் இன்சுலின் அளவு குறைவதனால் முதலாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. அதற்கு இன்சுலினே ஒரு மருந்தாக இருக்கின்றது. ஆனால் இரண்டாவது வகையைச் சேர்ந்த நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மாத்திரைகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகின்றது.

**கேள்வி: இந்த நோய்பற்றி நீங்கள் கூறும் ஆலோசனைகள் என்ன?**

பதில்: முதலில் நீரிழிவு என்றால் என்ன என்பது பற்றிய சிறிய விளக்கத்தை நாம் அறிந்திருப்பது மிக முக்கியமாகும். எமது இரத்தத்தில் இனிப்புச்சத்து (குளுக்கோசின் அளவு) வழமையாக இருப்பதிலும் பார்க்க அதிகரிப்பதினாலேயே நீரிழிவு நோய் ஏற்படுகிறது. குளுக்கோஸ் நாம் உண்ணும் உணவிலுள்ள மாப்பொருள் சமிபாடடைந்து குளுக்கோசாக மாற்றப்பட்டு குருதியால் அகத்துறிஞ்சப்படுகிறது. சாதாரண மனிதனின் 100*ml* குருதியில் 80 120*mg* குளுக்கோஸ் காணப்படுகிறது.

எமது உடல் இயக்கத்திற்குத் தேவையான குளுக்கோஸை எமது உடற் கலங்களுக்குள் உடைக்கப்பட்டுப் பெறப்படுகிறது. குருதியில் உள்ள குளுக்கோஸ் உடற்கலங்களுக்குள் செல்ல உதவுவது உணவுப்பாதையுடன் தொடர்பாக இருக்கும். சதையி (*Pancreases*) எனும் சுரப்பியால் சுரக்கப்படும் ‘இன்சுலின்’ (*Insulin*) எனப்படும் ஓர் ஓமோன் ஆகும். இந்த இன்சுலின் உடலில் தொழிற்படாது விடுவதால் அல்லது இன்சுலின் சுரக்கும் அளவு குறைவதால் குருதியிலுள்ள குளுக்கோஸ் உடற்கலங்களுக்குள் செல்வது தடைப்படும். இதனால் குருதியில் குளுக்கோசின் அளவு கூடுகிறது. சாதாரணமாக சிறுநீரகங்கள் குளுக்கோசை சிறுநீருடன் வெளியேற்றுவதில்லை.



# வெள்ளத்திலும் தண்ணீர் பஞ்சம்

வ. சக்திவேல்
shagthivel@gmail.com





“கோடைகாலத்தில் கடும் வரட்சியும் மாரிகாலத்தில் வெள்ளமும் வருகின்றன. வருடத்தில் எமக்கு சுத்தமான குடிநீர் என்பது கிடைப்பதில்லை; கோடை காலத்தில், எமது கிராமத்துக்குப் பின்புறமாகச் செல்லும் வாய்க்காலில், பூவல் தோண்டி (குளிவெட்டி) அதிலிருந்து ஊறும் நீரையே பருகி வருகின்றறோம். குளிப்பதற்கு வாய்க்கால் நீரைத்தான், எமது கிராமமே நம்பி வாழ்கின்றது. வாய்க்காலில் முதலை, அட்டை, யானை ஆகியவற்றுக்குப் பயந்து பயந்துதான், நாங்கள் எமது உடலையும், உடைகளையும் சுத்தம் செய்து வருகின்றோம். நாங்கள் அரசாங்கத்திடமோ, அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களிடமோ வேண்டுவதெல்லாம் எமது அண்டைய கிராமமான சின்னவத்தைக் கிராமத்திற்கு வழங்கப்பட்டுள்ளது போல், எமக்கும் குழாய் மூலமான குடிநீரைத் தந்துதவ வேண்டும் என்பதுதான்” என்கின்றனர் மாலையர்கட்டு கிராம மக்கள்.

மட்டக்களப்பு மாவட்டம், போரதீவுப் பற்றுப் பிரதேச சபைக்கு உட்பட்ட எல்லைப்புறத்தில் அமைந்துள்ளது மாலையர்கட்டு கிராமம். அங்கு 196 குடும்பங்களில் 635 இற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். வருடாந்தம் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஐப்பசி மாதம் வரையிலான கோடை காலத்தில் மிகுந்த வரட்சி நிலை நீடிக்கின்றது.

அக்காலப்பகுதியில், மாலையர்கட்டு கிராமத்தில் அமைந்துள்ள பொதுக்கிணறுகள் அனைத்தும் வற்றிப்போய், குடிநீருக்காக அங்குள்ள ஆற்றுப்படுக்கைகளில் குளிகள்வெட்டி, அதிலிருந்து ஊறும் நீரையே பருகி வருகின்றார்கள்.

மழை காலங்களிலும்கூட, சுத்தமான குடிநீர் கிடைக்காத நிலையிலும் அங்குள்ள ஒரு சில கிணறுகளில் பால் நிறத்தில் ஊறும் நீரையே மக்கள் பருகி வருகின்றனர். கோடை காலங்களில் முற்றாகத் தமக்குக் குடிநீர் கிடைக்காத துர்ப்பாக்கிய நிலையும் மழைக்காலத்தில் நீர் இருந்தும், ஆரோக்கியத்தன்மை அற்ற நிலையிலும் இருந்து வருவதாக மாலையர்கட்டு கிராம மக்கள் அங்கலாயக்கின்னறர்.

கோடை காலத்தில் போரதீவுப் பற்றுப் பிரதேச சபை, வவுசர் மூலம் ஏனைய பிரதேசங்களுக்கு வழங்குவது போன்று, எமது கிராமத்துக்கும் நீர் வழங்க முன்வரவேண்டும் என மாலையர்கட்டு கிராம மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

“வாய்க்கால் நீரை, சுரி (சேறு) மணத்துடன் பெற்று, நாம் மாத்திரமின்றி எமது குழந்தைகளும் பருகி வருவதால், சரும நோய் உள்ளிட்ட பல உபாதைகளுக்கும் உட்பட்டு வருகின்றோம். ‘குழாய் நீர் தருகின்றோம்’ எனப் பலர் வந்து பார்வையிட்டுச் சென்றும் இதுவரையில் எமது கிராமத்துக்குக் கிடைக்கவில்லை. காட்டு யானைகளுக்குப் பயந்து விடிய விடிய கண்விழித்திருந்து, பிள்ளைகள் குளித்து விட்டுப் பாடசாலைக்குச் செல்வதற்குப் படும் இன்னல்கள் சொல்லில் அடங்காதவை. நாங்கள் கேட்பது, சோறும் கறியும் இல்லை; எமக்குச் சுத்தமான குடிநீரையும் யானை வேலியையும் மாத்திரம்தான். இங்கு வருகின்ற அதிகாரிகள் அனைவரும், பிரதான வீதிகளுடாகப் பார்வையிட்டுச் செல்கின்றார்கள். எமது மக்கள் உரிய வீதிகளின்றி, அரை குறையாகக் கிடக்கும் வீடுகளுடன், சுத்தமான குடிநீரின்றி, காட்டுயானைகளின் இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்வதைச் சிரம் கொண்டு சீர்செய்ய வேண்டும்” எனவும் மாலையர்கட்டு கிராம மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

மாலையர்கட்டுக் கிராமத்துக்கு அருகில் அமைந்துள்ள சின்னவத்தை எனும் கிராமத்துக்கு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் குழாய் மூலமான குடிநீர் வழங்கப்படுகின்றது. இருந்தபோதிலும், மாலையர்கட்டு கிராமம், அதைப் பெற்றுக் கொள்வதற்கு பல முற்சிகளைப் பெற்றுள்ள போதிலும், இதுவரை எட்டாக் கனியாகவே உள்ளது.

போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில், வரட்சி நிலவும் காலத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள் தோறும் நீர் விநியோகம் மேற்கொள்வதற்குரிய நீர்த் தாங்கிகளை போரதீவுப் பற்றுப் பிரதேச சபைக்குப் பெற்றுக் கொடுத்துள்ளதாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ஆர். இராகுலநாயகி தெரிக்கின்றார்.

இந்நிலையில், 150 இற்கு மேற்பட்ட நீர் தாங்கிகளை போரதீவுப் பற்று பிரதேசத்திலுள்ள கிராமங்கள் தோறும் வைத்து, தினமும் 10 இற்கு மேற்பட்ட ஊழியர்களை ஈடுபடுத்தி, 150,000 இற்கும் மேற்பட்ட லீற்றர் குடிநீரை வழங்கி வருவதாகவும், இருந்த போதிலும், இக்காலப்பகுதியில் குடிநீர் வழங்குவதங்கு இன்னும் நீர் தாங்கிகள் தேவையாக உள்ளதாகவும் போரதீவப்பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் யோ. ரஜனி தெரிவிக்கின்றார்.

‘நீரின்றி அமையாது உலகு’ என்பதற்கிணங்க, சுத்தமான நீரின்றி மனிதன் தமது வாழ்நாளைக் கடத்துவாதாயின் அவனது ஆரோக்கியம் குன்றிவிடும். எனினும் கிராமப்புற மக்கள் இற்றைவரையில் சுத்தமான குடிநீரின்றி அல்லும் பகலும் அங்குமிங்கும் அலைந்து அலைந்து, தமது நீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்றார்கள்.

“மட்டக்களப்பிலுள்ள அனைத்து கிராமப் புறங்களுக்கும் குழாய் மூலமான குடிநீர் வழங்குவதற்குரிய திட்டமிடல்கள் உள்ளன. அவற்றுக்குரிய நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இன்னும் 10 திட்டங்களை மேற்கொள்வதற்குரிய ஒப்பந்தங்கள் கோரப்படவுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆறு இலட்சம் மக்கள் தொகையில் 42 சதவீதமானவர்களுக்கு நாம் குடிநீர் வழங்குகின்றோம்; அம்பாறை மாவட்டத்தில் 88 சதவீதமானவர்ளுக்கு குடிநீர் வழங்குகின்றோம். 2022 மார்ச் மாதமளவில் எமது திட்டங்கள் அனைத்தும் மேலும் விரிவு படுத்தப்படும். 2024 ஆம் ஆண்டு ஆகின்றபோது அனைவருக்கும் குழாய் மூலமான குடிநீர் வழங்கப்படும்” என, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காலத்தின் தேவையறிந்து, தேவைகள் எங்கு தேங்கிக்கிடக்கின்றவோ அவற்றைச் நிறைவேற்றிக் கொடுப்பதே தகுந்த சேவை எனலாம். தொடர்ச்சியாக நகர்ப்புறங்களில் இன்னுமின்னும் வானம் தொடும் வரைக்கும் கட்டடங்களையும் ஏனைய அபிவிருத்திகளையும் முடுக்கிவிடுவது போன்று, கிராமப் புறங்களில் வாழ்ந்து கொண்டு, காட்டு யானை உள்ளிட்ட விலங்குளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், தமது உயிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்வது போன்ற வாழ்கையை முன்னகர்த்திக் கொண்டிருக்கும் மகளின் அடிப்படைத் தேவைகளை காலத்துக்குக் காலம் கைகூப்பி வரும் மக்கள் பிரதிநிதிகளும், மக்களின் வரிப்பணத்தில் தகுந்த வேதனம் பெறும் அரச அதிகாரிகளும், உரிய திட்ட வரைபுகளை மேற்கொண்டு, அவற்றை நடைமுறைப்படுத்த முன்மாதிரியாகச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரியின் கருத்திற்கிணங்க கிராமப்புற மக்களின் குடி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு இன்னும் சிறிது காலம் எடுக்கும் எனத் தெரியவருகின்றது. என்றாலும், அதிலும் மாலையர்கட்டு கிராம மக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதோடு, போரதீவுப் பற்றுப் பிரதேச சபை, பிரதேச செயலகம் உள்ளிட்ட அரச நிர்வாகச் சக்கரங்கள் அக்கிராம மக்களின் குடி நீர் பிரச்சினைக்கு தற்காலிகத் தீர்வுகளாயினும் வழங்க உடன் முன்வரவேண்டும் என்பதுவே, மாலையர்கட்டு கிராம மக்களின் எதிர்பார்ப்பாகும்.









யாழ்ப்பாணம் – மானிப்பாய் – பொன்னாலை

# வீதி புனரமைப்பில் மோசடி?



என். பிருந்தாபன்

யாழ். மாவட்டத்தில் தற்போது பல வீதிகள், காபெற் வீதிகளாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருந்த யாழ்ப்பாணம் - மானிப்பாய் - பொன்னாலை வீதியும் புனரமைக்கப்படுகின்றது.

நீண்ட காலமாகத் தாம் எதிர்கொண்ட போக்குவரத்து நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்கப்போகின்றது என, மக்கள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். எனினும், வீதியைப் புனரமைக்கும் விதம், மக்களைக் கவலையடையச் செய்துள்ளது.

யாழ்ப்பாணம், சுடுகாட்டு ஆலடிச் சந்தியில் இருந்து, மானிப்பாய் ஊடாக பொன்னாலைச் சந்தி வரை, இந்த வீதி புனரமைக்கப்பட உள்ளது. அதாவது, இந்த வீதி யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்கின்றது. அதேபோன்று, யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை, வலி. தென் மேற்கு, வலி. மேற்கு ஆகிய பிரதேச சபைகளும் இதில் அடங்குகின்றன.

வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆங்காங்கே ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. மானிப்பாய் சந்தியில் இருந்து சங்கானை வரை வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சில இடங்களில் ஆரம்ப வேலைகள் முடிவடைந்து காபெற் இடும் பணி மட்டுமே எஞ்சியிருக்கின்றது.

ஆனால், மிகக் கவலையான விடயம் என்னவெனில், இந்த வீதிப் புனரமைப்பின்போது, வீதி அகலிக்கப்படவில்லை என்பதுடன், வீதியில் உள்ள மதகுகள் புனரமைக்கப்படாமல், அவற்றுக்கு மேலாகக் காபெற் போடப்படுகின்றது. ஏற்கெனவே சேதமடைந்து, அடுத்த சில வருடங்களிலேயே இடிந்து விழக்கூடிய அபாயம் உள்ள மதகுகளைக்கூட புனரமைக்காமல், அவற்றுக்கும் மேலாகக் காபெற் இடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அருகில் இடமிருக்கும் இடங்களில் மட்டும் வீதி அகலமாகவும் ஏனைய கடைத்தொகுதிகள், இதர கட்டடங்கள் உள்ள இடங்களில் ஒடுக்கமாகவும் வீதி புனரமைக்கப்படுகின்றது. வீதியோரம் இடையூறாக நிற்கும் மரங்கள்கூட தறிக்கப்படவில்லை. ஏனைய இடங்களில் குறிப்பாக, பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி போன்றன புனரமைக்கப்பட்ட போது, மக்கள் கட்டடங்களைப் பின்னகர்த்தி வீதிப் புனரமைப்புக்கு இடமளிக்கவில்லை. இதனால் புனரமைப்புக்குத் தடை ஏற்பட்டது.

எனினும், தொடர்ச்சியாக மக்களுக்கும் வர்த்தகர்கள் மற்றும் இதர தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதன் மூலம், அவர்கள் தமது கட்டடங்களைப் பின்னகர்த்தி இடமளித்தனர். இன்று குறித்த வீதிகள் போக்குவரத்துக்கு மிகச் சிறந்தவையாக மாற்றப்பட்டுள்ளன. ஆனால், இந்த வேலைத்திட்டம் யாழ். மானிப்பாய் - பொன்னாலை வீதிப் புனரமைப்பின் ஆரம்பத்தில் இடம்பெற்றிருக்கவில்லை.

ஆனால், வீதியின் ஆரம்ப புனரமைப்பு இடம்பெற்று, காபெற் இடுகின்ற வேலை நடைபெற்று வரும் நிலையில், தற்போது வலி. தென்மேற்கு பிரதேச செயலகம் ஆங்காங்கே சில கூட்டங்களை நடத்தி, மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. வலி. மேற்கு பிரதேச செயலகமும் இதற்கான சில கூட்டங்களை நடத்தியிருக்கின்றது.







மானிப்பாய், சங்கானை போன்றன எதிர்காலத்தில் நகர சபைகளாக தரம் உயர்த்தக்கூடிய நிலையை எட்டியுள்ளன. ஆனால், இந்த நகரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. சாதாரண நாள்களிலேயே இங்கு சனநெரிசல் அதிகமாக உள்ளது. பண்டிகை காலங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாமல் வாகன நெரிசல் அதிகமாக இருக்கின்றது. இந்த விடயங்கள் தொடர்பாக, வர்த்தகர்களுக்கும் மக்களுக்கும் விழிப்பூட்டப்பட வேண்டும். குறிப்பாக, மானிப்பாய், சங்கானை வர்த்தக சங்கங்கள் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுக்கவேண்டும்.

இது ஒருபுறம் இருக்க, மதகுகள் புனரமைக்கப்படாமை தொடர்பாக உடனடியாக கரிசனை செலுத்தப்பட வேண்டும். வலி. தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பிரதானமான ஆறு மதகுகள் எந்தவித புனரமைப்பும் இன்றி, அதற்கு மேலாக காபெற் இடப்படக்கூடிய நிலைக்கு புனரமைப்பு பணிகள் முடிவடைந்துள்ளன.

மானிப்பாய் - பொன்னாலை வீதியில், மானிப்பாய் சந்திக்கு சமீபமாக உள்ள மதகு, கட்டுடைச் சந்தியில் உள்ள மதகு, சண்டிலிப்பாய் சந்திக்கு சமீபமாக ஐந்துகண் மதகுக்கு அருகே உள்ள இரு மதகுகள், சண்டிலிப்பாய் - சங்கானை வீதியில் ஐயனார் சிலையடிக்குச் சமீபமாக இரு மதகுகள் என்பன எந்தவித புனரமைப்பும் செய்யப்படவில்லை. ஆறு மதகுகளும் பெருமளவில் சேதமடைந்த நிலையிலேயே உள்ளன. அடுத்துவரும் சில ஆண்டுகளில் மதகுகள் இடிந்துவிழக்கூடிய அபாயம் உள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பெரு வீதிகள் புனரமைப்பின்போது, மதகுகளும் புனரமைப்புக்குச் சேர்த்தே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது வழமையாகும். யாழ்ப்பாணத்தில் காபெற் வீதியாக புனரமைக்கப்பட்ட அத்தனை வீதிகளிலும் ஒரு மதகுகூட புனரமைக்கப்படாமல் விடப்படவில்லை.

ஆனால், மேற்படி வீதியில் உள்ள மதகுகளைப் புனரமைக்காமல் அதற்கு மேலாக காபெற் இடப்படும் செயற்பாடு இடம்பெறுவது மோசடியானது. இதுவரை, இவ்வாறு ஆறு மதகுகள் புனரமைக்கப்படவில்லை. இதன்மூலம், மக்கள் வெளிப்படையாக ஏமாற்றப்பட்டு எங்கோ உயர் மட்டத்தில் பாரிய நிதி மோசடி இடம்பெறுகின்றதா என சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த விடயம், கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் வலி. தென்மேற்கு பிரதேச சபையில் பேசுபொருளாக இருந்தது. கவனயீர்ப்பு போராட்டமும் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் த. கஜதீபன் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர். இதன்போது சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்ட வீதிப் புனரமைப்புடன் சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் நிலைமையை சமாளித்துவிட்டுச் சென்றனர்.

கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழேயே இந்த வீதி புனரமைக்கப்படுகின்றது எனவும் ஆறு மாதங்களுக்குள் இத்திட்டத்தை முடிவுறுத்த வேண்டும் என்பதால் இப்போது மதகுகளை அமைக்காமல் வேலைகள் முடிவடைந்த பின்னர் அமைத்துத் தருவோம் என அவர்கள் கூறினர். முதற்கட்டமாக, அதற்குரிய சில பணிகளை இப்போதே முன்னெடுப்போம் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

மேற்படி பொறியியலாளர்கள், எதுவும் தெரியாத அப்பாவி மக்களை ஏமாற்றுகின்றனர். கிராமிய வீதிகளை (ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளை) புனரமைக்கும் திட்டத்தின் கீழேயே கொக்குவில் - வட்டுக்கோட்டை- கட்டுவன் - மல்லாகம் - சங்கானை பருத்தித்துறை, சண்டிலிப்பாய் - சேந்தாங்குளம் ஆகிய வீதிகளும் புனரமைக்கப்படுகின்றன. இந்த வீதிகள் உரிய விதிகளின் கீழ், பாலங்கள், வடிகால்கள் புனரமைக்கப்பட்டு, மதில்கள் பின்னகர்த்தப்பட்டு நேர்த்தியாக புனரமைப்பு பணி இடம்பெறுகின்றது. ஆனால், யாழ்-மானிப்பாய்-பொன்னாலை வீதிக்கு மட்டும் என்ன புதிய நடைமுறை?

உயர் அதிகாரிகள் வழங்கும் போலி உறுதிமொழிகளை மக்களோ உள்ளூர் அதிகாரிகளோ ஏற்றுக்கொள்ளக் கூடாது. அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பது காலதாமதம் ஆகுமெனில், காலத்தை நீட்டிப்பதற்கும் பல வழிகள் உள்ளன. ஆனால், காலத்தைக் காரணம் காட்டி அரைகுறை அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு இடமளிக்க முடியாது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச தரப்பு அமைச்சர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஆகியோரும் இவ்விடயத்தில் அக்கறையின்றி இருப்பதாகவே தெரிகின்றது.

தினமும் அதிகமான மக்கள் பயணிக்கும் பெரு வீதி ஒன்றை, அரைகுறையாகப் புனரமைப்பதற்கு அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூர் அரசியல்வாதிகளான பிரதேச சபை உறுப்பினர்கள் தற்துணிவுடன் செயற்பட வேண்டும். குறிப்பாக, வலி.தென் மேற்கு, வலி. மேற்கு ஆகிய பிரதேச சபைகள் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும்.

அபிவிருத்தி என்பது மக்களுக்கானதே அன்றி, அதிகாரிகளுக்கோ அரசியல்வாதிகளுக்கோ உரியதல்ல. எனவே, பாலங்கள், மதகுகள் அனைத்தையும் பூரணமாகக் கட்டி முடித்த பின்னர், வீதியை அமைக்குமாறு உயர்மட்டத்தினருக்கு மக்கள் இடித்துரைக்க வேண்டும். ஆயிரக்கணக்கான கல்விமான்கள் தினமும் சென்றுவரும் வீதியில், வெளிப்படையாகப் பெரும் மோசடி இடம்பெறுவதை தடுத்து நிறுத்தவில்லையாயின் அனைவரும் குற்றவாளிகளே!



கழிவு முகாமைத்துவம்:

# விழிபிதுங்கும் வவுனியா



க. அகரன்

மனிதனின் அலட்சியத்தால், உலகமே எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது திண்மக் கழிவுகளின் தேக்கம்.

மனித வளர்ச்சி எந்தளவு வேகம் கொள்கின்றதோ, அதற்கும் அதிகமாக உக்காத மற்றும் உக்க கூடிய கழிவுகளும் வகைதொகையின்றி வெளியேற்றப்படுகின்றது. எனினும், ஆசியா நாடுகள் பெரும்பாலானவற்றில் இந்தக் கழிவுப்பொருட்கள் சரியான முகாமைத்துவத்தின் கீழ் அகற்றப்படுகின்றதா என்ற கேள்விக்கு 'இல்லை' என்ற பதிலாக உள்ளது.

இலங்கை போன்ற நாட்டில் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கழிவகற்றல் செயற்றிட்டமானது உள்ளூராட்சி மன்றங்களின் கட்டாய செயற்பாடு எனவும் அது அத்தியாவசிய சேவை என அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

எனினும், அந்த வர்த்தமானி கழிவகற்றல் தொடர்பாக இருந்ததே தவிர, தரம் பிரித்து அகற்றப்பட வேண்டும் என்ற கரிசனை கொள்ளாமையால் இன்றும் திண்ம கழிவுகள் குப்பை மேடுகளாக உருவாகுவதற்கு வழிசமைத்து வருவதனை மறுத்துவிட முடியாது.

பிளாஸ்டிக், பொலித்தீன், இலத்திரனியல் கழிவுகள் என திண்ம கழிவுகளால் சுற்றுசூழலுக்கு ஏற்பட போகும் பாதிப்புகளால் எமது எதிர்கால சந்ததி எதிர்கொள்ளப்போகும் ஆபத்துகள் தொடர்பில் மனித குலம் சிந்திக்காத நிலையிலேயே காணப்படுகின்றது.

இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் வெறுமனே பேச்சளவில் இல்லாமல், பாடசாலை மட்டத்தில் இருந்து கழிவு முகாமைத்துவம் தொடர்பான கற்றலை மேற்கொள்ள வேண்டிய தேவை அத்தியாவசியமானதாகும்.

இலங்கை போன்ற சிறிய தீவுகள் திண்ம கழிவுகளால் ஏற்பட போகும் ஆபத்துகள் தொடர்பில் மிகுந்த கரிசனை கொள்ள வேண்டியதோடு கழிவு முகாமைத்துவம் சார்ந்து, தீவிர அக்கறையைச் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. எனவே, அது மாணவர் மத்தியில் இருந்து கட்டியெழுப்ப வேண்டிய தேவை இலங்கைக்கு உள்ளது.

இதற்குமப்பால் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான தொழிற்பாடாகவுள்ள கழிவகற்றல், சீராகவும் முறையாகவும் செயற்படுத்தப்படாமையாலும் அதற்கான ஒழுங்கமைப்புகள் திட்டமிட்ட வகையில் இல்லாமையாலும் இன்று வீதியோராங்களிலும் நீர் வழிந்தோடும் கால்வாய்களிலும் வயல்வெளிகளிலும் ஏனைய பல இடங்களிலும் பொலித்தீன் உட்பட உக்காத பலவகை பொருட்கள் தேக்க நிலையை அடைந்து வருகின்றன.

வவுனியா போன்ற நகரங்களில் வீதியோர வியாபாரங்களால் அதிகளவான பொலித்தீன்கள் கால்வாய்களில் தேங்கியுள்ளமை பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் கூட, வீதியோர வியாபாரத்துக்கான முறையான ஒழுங்கமைப்பு இன்மை, கழிவுகளைச் சேகரிக்கும் தொட்டிகளை மக்கள் இலகுவில் நாடக்கூடிய இடங்களில் இன்மையும் இவ்வாறான நிலைமைக்கு காரணமாக மாறியுள்ளது.

வவுனியா வர்த்தகர் சங்கம், பல இலட்சம் ரூபாய் செலவில், வவுனியா நகர்ப்பகுதி எங்கும் கழிவகற்றல் தொட்டிகளை வவுனியா நகரசபை தலைவர் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் வைத்திருந்த போதிலும், அதைச் சீராகப் பராமரிக்க முடியாத வவுனியா நகர சபை, ஒரு சில நாளன்களிலேயே தமது உழவு இயந்திரங்களில் அவற்றை ஏற்றி நகர சபையின் வளாகத்தில் பயன்படாத வகையில் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.



இவ்வாறான நிலையிலேயே, வவுனியா வயல்வெளிகள் உட்பட பிரதான நீர் வளங்களான குளங்களிலும் பிளாஸ்டிக் உட்பட பொலித்தீன்கள் தேங்கிக் காணப்படுகின்றது.

அண்மையில், யாழ். மாநகர சபையால், கால்வாய்களில் தேங்கியிருந்த பல தொன் பிளாஸ்டிக் உட்பட உக்காத கழிவுகள் அகற்றப்பட்டன.

இதன் பெறுபேறே, அண்மையில் யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் வெள்ளம் தேங்கிய போதிலும், மாலை வேளையிலேயே மழை நீர் வழிந்தோடியிருந்தது. ஆகவே, குறித்த கால்வாய்கள் சீர் செய்யப்பட்டு இருந்காவிட்டால், யாழ். நகரம் இன்றும் மழை நீரில் மிதந்திருக்கும் எனப் பலரும் கருதும் நிலை உள்ளது.

இவ்வாறான செயற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்க உள்ளூராட்சி மன்றங்கள் தயாராக உள்ளதா என்பதற்கப்பால், மக்கள் இதன் தாற்பரியத்தை உணர்ந்துள்ளனரா என்பதே முக்கியமானதாகும்.

மக்கள் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் விழிப்புணர்வடையாத வரையில், அக்கறை கொள்ளாத வரையில், திண்மக் கழிவுகளால் இலங்கை பாரிய சவாலை எதிர்கொள்ளும் என்பதில் ஐயமேதும் இல்லை.

குறிப்பாக, வவுனியாவில் உள்ள நான்கு உள்ளூராட்சி மன்றங்களில் அதிகளவில் உக்காத கழிவுப்பொருட்களின் பாதிப்புக்குள்ளாகுவது வவுனியா நகர சபையே ஆகும்.

38,000 இற்கும் மேற்பட்ட சனத்தொகையை உள்ளடக்கிய இந்த நகர சபையில் ஒரு நாளைக்கு சுமார் எட்டுத் தொன் கழிவுகளை அகற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது. எனினும் இந்தக் கழிவுகள் ஒட்டுமொத்தமாகத் தரம் பிரிக்கப்படாமல், பம்பைமடு பகுதியில் உள்ள குப்பை மேட்டிலேயே கொட்டப்பட்டு வருகின்றது.

எனவே, வரியிறுப்பாளர்களிடம் அவர்களின் வீடுகள், வர்த்தக நிலையங்களில் தரம் பிரித்து, கழிவுகள் அகற்றப்படுமாயின் பாரிய கழிவுத் தேக்கத்தை வவுனியா நகர சபை எதிர்கொள்ளாது.

குறித்த திட்டத்தை நகர்ப் பகுதியில் செயற்படுத்துவதற்கு நகரசபை சில நாள்கள் முயற்சித்த போதிலும், மக்களுக்குச் சரியான அறிவுத்தல் வழங்காமை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் தேர்தல் கால வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு, குறித்த திட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டனர்.

எனினும், வவுனியா நகர சபையைப் பொறுத்தவரையில், இத்திட்டத்தைச் சீராகச் செயற்படுத்துவதற்கு வழி தெரியாமல், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளின் அரசியல் எதிர்காலத்துக்காகச் செயற்பட முனைவதால், இன்று வவுனியா நகரம் மீண்டும் குப்பை மேடாகவே மாறி வருகின்றமையை தெளிவாகக் காணலாம்.

இதற்குமப்பால், அரச திணைக்களங்கள் கூட 5S திட்டத்தைத் தாம் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதாக தம்பட்டமடித்தாலும் கூட, தமது அலுவலக கழிவுகளைத் தரம் பிரித்து வழங்குவதில், இன்றும் அக்கறை கொள்ளவில்லை. நகர சபையும் அதை வலிறுத்துவதும் இல்லை.

இன்று உலக ஒழுங்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வரும் நிலையில், திண்மக் கழிவகற்றல் செயற்பாடானது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

எனவே, வடக்கில் இரண்டாவது அதிக வருமானம் பெறும் உள்ளூராட்சி மன்றமாக காணப்படும் வவுனியா நகர சபையால், உக்காத மற்றும் உக்கும் கழிவுகளை முகாமை செய்வதற்குப் பல பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இதில் முக்கியமானது, மக்கள் இலகுவில் அணுக கூடிய முறையிலான கழிவு தொட்டிகள் நகர்ப் பகுதியில் அமைக்கப்படல், வரியிறுப்பாளர்களிடம் தரம் பிரித்துக் கழிவுகளை அகற்றல், வீதியோர வியாபாரத்தை முறையான இட ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளல், கழிவு கால்வாய்களை வாராந்தம் சுத்தம் செய்தல், நகர்ப்புறங்களில் கண்டகண்ட இடங்களில் கழிவுகளை வீசும் போது, மக்களிடம் தண்டம் அறவிடல் போன்ற ஆரம்பக் கட்டச் செயற்பாடுகளை முறையாக முன்னெடுத்தால் வவுனியா நகரில் ஏற்படும் பாரிய ஆபத்துகளை நிவர்த்திக்க முடியும் என்பதை அனைவரும் உணரத் தலைப்பட வேண்டும்.

# சாணக்கியனின் சாணக்கியம்: இரட்டைப் பிரஜாவுரிமைக்கான அழுத்தம்

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு விரைவில் இரட்டை பிரஜாவுரிமையை வழங்கி, தபால் மூலமாகவேனும் வாக்களிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் விடுத்துள்ள கோரிக்கை, காலத்தின் தேவையுணர்ந்தும் தீர்க்கதரிசனத்துடனும் முன்வைக்கப்பட்ட உரிமைக் கருத்தாகும்.

இரட்டை பிரஜாவுரிமையுள்ள அமெரிக்க மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் பிரஜாவுரிமையைக் கொண்டிருக்கும் பசில் ராஜபக்ஷ, இலங்கையின் நிதி அமைச்சராகப் பதவிவகிக்கும் போது, வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் தமிழர்களும் இரட்டை பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான நிர்வாகத் தடைகளும் இருக்கக் கூடாது என்பதே, ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பாகும்.

இரட்டை பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் இலகுவாக்கப்பட்டிருந்தாலும், அதற்கான கட்டணத்தைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்பதும் சாணக்கியன் எம்.பியின் வேண்டுகோள்களில் ஒன்றாக இருந்தது.

இவ்வாறாக, இரட்டைப் பிரஜாவுரிமைக்கான கட்டணம் குறைக்கப்படும்போது, வெளிநாட்டில் வாழ்பவர்களில் பெருமளவானவர்கள், பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வருவார்கள். இதன்மூலம், நாட்டுக்கு பெருந்தொகையான டொலர் கிடைப்பதற்கான வாய்ப்பும் கிட்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தோர் மட்டுமல்ல, சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தோர், இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்ள விருப்பத்துடன் முன்வரவேண்டும்.

ஏனெனில், சிறுபான்மை இனங்களின் அதிகரித்த பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது, இன்றைய காலகட்டத்தில் அவர்களின் உரிமைகளையும் இருப்பையும் உறுதி செய்யும் பொருட்டு முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

ஏனெனில், யாழ்ப்பாண மாவட்டத்தில், 2010 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில், ஆசனங்களின் எண்ணிக்கை ஒன்பதாகக் காணப்பட்டது. இதுவே, 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது, ஆறு ஆசனங்களாகக் குறைக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை, அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், ஐந்தாகக் குறைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் சனத்தொகை குறைவடைந்தமையே இதற்கான காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

இதன் பாதிப்புகளின் ஆழம் உணர்ந்து, பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முன்வைத்திருக்கும் கருத்தின் பிரகாரம், புலம்பெயர்ந்து வாழும், இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை பெறுவதற்கான வழிவகைகளை இலகுவாக்கி, அவர்கள் இலங்கையின் உள்ளூர் அரசியலில் பங்காளிகளாக உருவாகுவதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

புலம்பெயர்ந்தவர்களில் இலங்கை அடையாள அட்டை, கடவுச்சீட்டு, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ஆகியவற்றைக் கொண்டிருப்போர் அந்தந்த நாட்டிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகங்களில் வாக்களிப்பதற்கு தேவையான நடவடிக்கையை அரசாங்கம் செய்ய வேண்டும்.

வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என மூவின இலங்கையர்களும் தேர்தல்களில் வாக்களிப்பதன்மூலம், இலங்கை அரசியலில் அவர்களும் பங்குதாரர்களாகும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இதன்மூலம், இலங்கை அரசியல் சரியான பாதையில் பயணிப்பதைத் தீர்மானிக்கும் சக்திகளாக அவர்கள் இருப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ள முடியும். ஒரே எறியில் பல மாங்காய்களை விழுத்தும் இத்தகைய சாணக்கிய அணுகுமுறை காலத்தின் தேவையாகும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உலகை நோக்கும் ஒரு மனிதனை, உலகமும் ஏறெடுத்துப் பார்க்கின்றது. இதை நீங்கள் உறுதியுடன் தீட்சண்யமாக உணருங்கள். வையகமும் மனிதனும் ஒன்றோடு ஒன்றாகப் பிணைந்தவர்கள்.

எனவே, நீங்கள் என்றும் உலகை விரும்புங்கள்; அதனுடன் பயணிப்பீர்களாக! உலக ஈர்ப்பு உங்களை நாடிவிடுகின்றன. மனம் மகா வல்லமையும் வசீகரமும் கொண்டது. உலகம் மட்டுமல்ல, பிரபஞ்சமும் எமக்கானது.

நாங்கள் உலகை வெறுக்க வேண்டிய அவசியம் கிடையாது. எவரையும் குறைசொல்வதும் துன்பம் வந்தால், பூமியில் ஏன் பிறந்தேன் எனத் சலிப்படைவதும் சிறப்பான வாழ்வு அமைந்தால், தன்னையும் பிறந்த மண்ணையும் மறப்பதும் தவறானது.

இன்று பல உலகத் தலைவர்கள், தங்களின் தேசம் மகத்தானது; எல்லாமே தங்களுக்கானது எனக் கருதி மமதை கொள்கின்றார்கள். இவர்கள் கடவுளுக்கு மட்டுமல்ல, மனிதனுக்கும் பயப்பிடுவதில்லை.

போரை விரும்புகின்றார்கள்; வலிந்து சண்டைக்குப் போகின்றார்கள். வெளிநாடுகளுடன் போரிட விரும்பாதவர்கள், தங்கள் நாட்டுக்குள் வீரம்பேசி, மக்ளை முடக்குகின்றார்கள். கடவுளை நம்புங்கள்; பிறந்த அகிலத்தைப் போற்றுங்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

மட்டக்களப்பு மாநகர சபையில்

# அதிகாரப் பலப்பரீட்சை

லக்ஸ்மன்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சட்டத்தை மீறும் அதிகாரிக்கு நடவடிக்கை எடுக்காத ஆளுநர் என்ற கோசம் மட்டக்களப்பிலிருந்து நாட்டின் உள்ளூராட்சித்துறைக்குள் கேள்விகளை எழுப்பிவருகிறது.

இது ஒரு மாநகர சபை சம்பந்தப்பட்டது மட்டுமே. உள்ளூராட்சி சபைகளில் நடைபெறும் சாதாரணமான விடயம் என்றே அதிகாரிகள், திணைக்களங்கள், ஊடகங்கள் உள்ளிட்ட எல்லோரும் பார்க்கின்றனர். ஆனால், இதற்குள் இருக்கின்ற சூட்சுமம் மிகவும் சிக்கலானது.

உள்ளூராட்சிச் சட்டங்களின் கீழ் உள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளின் அதிகாரம் அளிக்கப்பட்ட அரசியல் அலகே சபைகளாகும். தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளின் சபைக்கு நிருவாகத்தினர் கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள். இதனை உள்ளூராட்சி சபைகளின் நிறைவேற்று அதிகாரமாகவே இலங்கை அரசியலமைப்பு வரையறுக்கிறது.

ஆனால் மட்டக்களப்பு மாநகர சபையில் மாத்திரம் அதற்கு எதிரான செயற்பாடுகளே நடைபெறுகின்றன. அதற்கு தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமா, அல்லது அரசியல் போட்டியா, கட்சி பேதமா, அரசியல் காழ்ப்புணர்ச்சியா என்பதெல்லாம் புரியாத புதிராகவே இருக்கிறது. புத்தி ஜீவிகளும், உள்ளூராட்சி சார் பங்குதாரர்களான மக்களும் இந்தவிடயத்தில் அக்கறையற்றிருப்பது கவலையானதே.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏறாவூர் பற்று (செங்கலடி), மண்முனை தென் எருவில் பற்று (களுதாவளை), மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை), மண்முனை மேற்கு (வவுணதீவு), போரதீவுப்பற்று (வெல்லாவெளி) ஆகிய பிரதேச சபைகள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆட்சிக்குட்பட்டதாக இருக்கிறது. ஒரேயொரு மாநகர சபையாக மட்டக்களப்பு மாநகர சபை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வசம் இருக்கிறது.

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தினை கடந்த 05.04.2018 அன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டது. அன்றிலிருந்து இரு ஆணையாளர்கள் கடமையாற்றியுள்ளனர். அவர்களுடன் இல்லாத குழப்பம் மூன்றாவதாக 2020 டிசெம்பரில் நியமிக்கப்பட்ட புதியவருடன் என்ன என்பதே கேள்வி.

2018ஆம் ஆண்டு முதல் 2019 வரை மணல் வீதியில்லா மாநகரம் என்ற திட்டத்தின் ஊடாக 300க்கும் மேற்பட்ட வீதி அபிவிருத்தி வேலைகள், 20 வரையான வடிகான் கட்டுமானம் என்பன மேற்கொள்ளப்பட்டது. 2020ம் ஆண்டு கொவிட் தொற்றால் நாடு முடக்கப்பட்ட வேளையிலும் கூட 105 வீதி வேலைகளும், 16 பிரதான வடிகான் கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் 2021ம் ஆண்டில் 11 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், நடைபெற்றவைகள் மிகச் சொற்பமே என்கிறது மாநகர சபைத் தகவல்கள். இதற்கு தற்போதுள்ள ஆணையாளருடைய செயற்பாடே காரணம் என்கிறது மேயர் தரப்பு.

அத்தோடு, 2020.12.07ஆம் திகதி முதல் மாநகர சபையின் ஆணையாளராக புதியவர் நியமிக்கப்பட்டதனை தொடர்ந்து சபையின் செயற்பாடுகளை குழப்பியடிக்கும் விதமாகவும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட மாநகர சபையின் கட்டளைச் சட்டம், தாபனவிதிக் கோவை மற்றும் நிதி நிர்வாக சுற்றறிக்கைகளையும், அத்துடன் சபைத் தீர்மானங்களையும் மீறிச் செயற்பட்டு வருவதையும் எம்மால் அவதானிக்க முடிந்ததுடன், அது தொடர்பில் உடனுக்குடன் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்திற்கும், பிரதம செயலாளர், முதலமைச்சரின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு வந்திருந்தோம். இருந்த போதும் அது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரினால் எதுவித நடவடிக்கைகளோ எடுக்கப்படாமலும், அல்லது அது தொடர்பாக அவருக்கான அறிவுறுத்தல்களோ வழங்கப்படாமலும் இருந்தமையானது அவர் இவ்வாறான அத்துமீறிய செயற்பாட்டினை தொடர்வதற்கு காரணமாக அமைந்தது என்றும் மேயர் தரப்பு கருத்து முன்வைக்கின்றது.

இந்நிலையில், புதன்கிழமை (10) கிழக்கு மாகாண ஆளுநர், மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் ஆகியோருக்கு எதிராக மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. கடந்த கூட்டறிகை இன்மையால் சபை அமர்வு மேயரால் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து மேயர் உட்பட உறுப்பினர்கள் பலரும் மேற்படி நிர்வாக நடவடிக்கையைக் கண்டித்தும், கிழக்கு மாகாண ஆளுநர் மாநகர சபை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிப்பதையும் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறான பிரச்சினைகள் கடந்த 2020 டிசெம்பர் மாதத்திலிருந்து நடைபெறுகின்ற மேயருக்கும் ஆணையாளருக்குமிடையிலுள்ள பிரச்சினையாகும். இருவரும், மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். ஒவ்வோர் அரசியல் நிலைப்பாடுகள் கொண்டவர்கள். தனிப்பட்ட விடயங்கள் நிர்வாகம், அதிகாரச் செயற்பாடுகள் சார்ந்து வருகின்றபோது, பொருந்தாது என்பது சிலவேளைகளில் எல்லோருக்கும் புரிந்துவிடுவதில்லை. அதுபோன்றதொரு புரிதலுக்கு மட்டக்களப்பு மாநகர சபை தயாராக இல்லை.

கடந்த டிசெம்பருக்குப் பின்னர் உருவான முறுகல் நிலை, ஆணையாளரருடைய அதிகாரங்கள் மாநகர மேயரால் மீளப்பெறப்பட்டதுடன் முற்றிக் கொண்டது. பின்னர், மாநகர ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் சபையால் மீளப்பெறப்பட்டுள்ளது. ஆனால் அவருடைய செயற்பாடுகள் கட்டுப்படுத்த முடியாதவைகளாகவே இருந்தன. அவரின் தொடர் நடவடிக்கை காரணமாக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இருந்தாலும், ஆணையாளரின் செயற்பாடுகளில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறவில்லை.

ஆளுநர், பிரதம செயலாளர் தகுந்த நடவடிக்கையினை எடுக்காத நிலையில் இவர்கள் இவ்வாறு குழப்பத்தினை விளைவிக்கும் ஆணையாளரை மாற்றி புதிய ஆணையாளர் ஒருவரை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோசமிட்டுப் போராட்டம் நடத்தும் நிலை உருவாகியிருக்கிறது.

2020 டிசெம்பருடன் உருவான சிக்கல் முடிவுக்கு வராமல், மாநகர மேயரால் மீளப்பெறப்பட்ட அதிகாரங்களில் தலையீடு செய்ய மாநகர ஆணையாளருக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. பின்னரான நடவடிக்கைகள் காரணமாக, நீதிமன்றக் கட்டளையை மீறியமை தொடர்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு 87 குற்றச்சாட்டுக்களுடன், மேயரால் தாக்கல் செய்யப்பட்டது. அதன் காரணமாக ஆணையாளர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறன நிலைமை ஏற்பட்டால் தாபன விதிக்கோவையின் பிரகாரம் பதவியிலிருந்து நீக்கப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெற்றிருக்கவில்லை.

அதற்கும் மேலதிகமாக மூன்று தடவைகள் பிரதமரால் ஆணையாளரை இடமாற்றம் செய்யும்படி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளபோதும் எந்தவித நடவடிக்கயும் எடுக்கப்படவில்லை.

குறிப்பாக, இலங்கை நிர்வாக சேவை அதிகாரி ஒருவர், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தினை வெளிப்படையாக மீறும் போது அவருக்கு எதிராக, முறையான ஒழுங்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு அவ் அதிகாரிக்கான நியமன அதிகாரியையே சாரும்.

மாநகர ஆணையாளரது செயற்பாடுகள் தவறானது என உள்ளூராட்சி ஆணையார், முதலமைச்சரின் செயலாளர் ஆகியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆளுநர் அதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆளுநர் இவ்வாறு மௌனமாக இருந்தமையை, ஆணையாளரது அத்துமீறிய செயற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவே குற்றம்சாட்டப்படுகிறது. இது வெறும் குற்றச்சாட்டல்ல.

உண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆட்சிக் காலத்தில் மக்களுக்கான சேவைகளையும் அபிவிருத்திகளையும் திறம்பட மேற்கொள்ளக் கூடாது என கிழக்கு ஆளுநர் திட்டமிட்டு முன்னெடுக்கும் செயற்பாடுகளாகவே கொள்ள வேண்டும்.

அத்துடன், மாநகர ஆணையாளரின் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் அதற்கான நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கை எதனையும் எடுக்காத நிலையில், ஆளுநர், மாநகர ஆணையாளர் தவறுகளை இழைக்கவில்லை என மேயரிடம் தெரிவித்துள்ளமையானது அரசியல் ரீதியான பாரதூரமான பாகுபாட்டையே வெளிக்காட்டிநிற்கிறது. இந்த பாகுபாட்டுத் தன்மையானது இலங்கையின் உள்ளூராட்சி அரசியல் வரலாற்றில் கறைபடிந்த பதிவாகவே இருக்கும்.

எனினும், 2021 பெப்ரவரியில் ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசாரணை குழு, ஓகஸ்ட் மாதத்தில் அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் ஆணையாளர் கட்டளைச் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும், மாநகர சபைத் தீர்மானங்களை அமல்படுத்தல் வேண்டும். உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுத்தல்களை பின்பற்ற வேண்டும் ஆகிய மூன்று பரிந்துரைகளை முன்வைத்திருந்தது.

இப் பரிந்துரைகளின் படி, ஆணையாளர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதுவரை அது நடைபெறவில்லை. அத்துடன், நான்காவதாக மேயருக்கும் ஆணையாளருக்குமிடையில் இணக்கப்பட்டை ஏற்படுத்துதல் என்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டிருந்தது.

இவை எதுவும் நடைபெறாமலேயே நகரும் மட்டக்களப்பு மாநகர சபையானது நிதிப்பற்றாக்குறையையும் அபிவிருத்திகள் போதாமையையும் சுமக்கிறது. இது மாநகர சபைக்கு பெரும் இழப்பே. இதனைச் சீர் செய்வதற்கான வழிகளை யார் தேடுவது என்பது இந்த இடத்தில் தொக்கி நிற்கிறது.

## கடிதங்கள்

### வெள்ளத்தால் பாம்புகள் படையெடுப்பு

அம்பாறை மாவட்டத்தில் வானிலை மாற்றத்தின் காரணமாக, வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, காடுகளை அண்டிய விவசாய நிலங்களுக்குள் பாம்புகளின் நடமாட்டம் பெருமளவில் காணப்படுவதாக விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய மழையுடன் கூடிய வானிலையால், வயல் பகுதிகளில் பாம்புகளுடன் ஒருவகையான புதிய இனப் புழுவும் காணப்படுவதாகவும் விவசாயிகள் அச்சத்துடன் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சாகாமம், திருக்கோவில், மட்டமடு, சாந்திபுரம் போன்ற பகுதிகளிலேயே இவ்வாறு பாம்புகளின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுகின்றது.

மேலும், இவ்வாறு விவசாய நிலங்களில் ஊர்ந்து திரியும் பாம்புகள் தீண்டி, அண்மைக் காலமாக பல விவசாயிகள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனவே, பாம்புகளிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள, விவசாய நிலங்களில் வேலை செய்யும்போது, அவதானத்துடன் செயற்படுமாறு விவசாய அமைப்புகளும் மருத்துவர்களும் அறிவுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

என். ஹரன்





முஸ்லிம் பெண் எழுத்தாளர் மாநாடு – டிசெம்பர் 05

# ‘சுட்டு விரல்’

வி.ரி. சகாதேவராஜா



இலங்கையில் முதலாவது முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் மாநாடும், ‘ஸ்ரீ லங்கா பென்கிளப்’ வெளியீடான 62 பெண் கவிஞர்களின் கவிதைகளடங்கிய ‘சுட்டு விரல்’ கவிதைத் தொகுதி வெளியீடும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஐந்தாம் திகதி (2021.12.05) நடத்தத் திட்டமிட்டு இருக்கிறோம் என்று கூறுகின்றார் கவிதாயினி மஷூறா ஏ மஜீட்.

‘ஸ்ரீ லங்கா பென்கிளப்’ (SriLanka Pen Club) என்ற அமைப்பு வெளியிடவிருக்கின்ற ‘சுட்டுவிரல்’ கவிதைத்தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா தொடர்பான முதல் அமர்வு சாய்ந்தமருது அல்ஹிலால் மகா வித்தியாலயத்தில் சனிக்கிழமை (06) நடைபெற்றது.

உபதலைவியும் அல்ஹிலால் பிரதிஅதிபருமான கவிதாயினி முஜாமலா வரவேற்புரை நிகழ்த்த, செயலாளர் கவிதாயினி வானம்பாடி றிப்கா அன்சார் நிகழ்வை நெறிப்படுத்தினார்.

ஆலோசனைக்காக அழைக்கப்பட்டிருந்த அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தௌபீக், உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர்.

அங்கு தலைவி மஷூறா மேலும் கூறுகையில். “இம் மாநாட்டுக்கு இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்து Srilanka Pen Club உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர். கலந்து கொள்ளும் முஸ்லிம் பெண் கவிஞர்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மிகுந்த எதிர்பார்ப்புடன் சிறப்பாக நடத்தப்படவிருக்கும் இவ்விழாவுக்கு கிழக்கு இளைஞர் அமைப்பு அனுசரணை வழங்குகிறது” என்றார்.

இந்த மாநாடு தொடர்பாகவும் ‘சுட்டுவிரல்’ கவிதைத் தொகுப்பு தொடர்பாகவும் மேலும் விவரிக்கையில் கூறியதாவது: “உலகெங்கனும் வாழும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் ஆற்றல்களை மேம்படுத்தவென ஆரம்பிக்கப்பட்டதே ‘ஸ்ரீ லங்கா பென்கிளப்’ என்ற டிஜிடல் அமைப்பு. முஸ்லிம் பெண்களின் படைப்புகளைத் தொகுத்து வெளியிடுவதும் அடுத்த நோக்கம். அதன் பிரதிபலிப்பாக வரவிருப்பதே ‘சுட்டுவிரல்’ என்ற கவிதைத்தொகுப்பு நூலாகும்.

தற்போது உலகளாவிய ரீதியில் 145 முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் எமது அமைப்பில் உறுப்பினராகவுள்ளனர். முஸ்லிம் பெண் எழுத்தாளர்களது ஆற்றலுக்கான களங்களை வியாபித்துக் கொள்ள வழிகாட்டுவது; கலாசாரத்தினூடாக கலை இலக்கியங்களைக் கட்டியெழுப்புவது; இலைமறை காயாக இருக்கும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களைப் படைப்புலகுக்குக் கொண்டு வருவது; எதிர்காலத்தில் சர்வதேச ரீதியில் அமைப்பினை வியாபிப்பது; அவசியமான கலை இலக்கிய நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் தேர்ச்சியடையும் பொருட்டு, பொருத்தமான வளவாளர்களைக் கொண்டு பயிற்சிப்பட்டறை நடத்துவது; இஸ்லாத்தில் பெண் உரிமை பற்றிய அறிவை அங்கத்தவர்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பேற்படுத்துவது; இலக்கியத்துக்கு மேலதிகமாக எதிர்காலத்தில் கவின்கலைகளின் வளர்ச்சிக்கும் உழைப்பது போன்ற நோக்கங்களைக் கொண்ட நாம், முகநூல் செயலியில் பலவித படைப்புகளை தினமும் படைத்துவருகிறோம். உதாரணமாக:

ஞாயிற்றுக்கிழமைகளில் ‘ஞாயிறு கலாட்டா’ எனும் மகுடத்தின்கீழ், 1.போட்டி - சம்மாந்துறை மஷூறா. 2. ஆக்கங்கள் - பிர்தௌசியா 3. முகநூல் வெளியில் - சம்மாந்துறை மஷூறா. 4. பாடிப் பார்க்கலாமா? - ஷர்ஜிலா, ஸப்னா பானு ஆகியோர் படைக்கிறார்கள்.

திங்கள் கிழமைகளில் பெண் எழுத்தாளர் அறிமுகம். ரோணியோ அறிமுகம். 1.கவிதை எழுதுங்கள் - சிமாயா காதர். 2. சீரியல் - ரபீக்கா பல்கீஸ். 3. சிறுவர் ஆக்கம் - ஹூமதா கப்பார். 4. சமையல் செய்யலாமா? ரமீஸா மொகிதீன், நஸீரா ஹஸன்.

செவ்வாய்க்கிழமைகளில் 1.மனம் திறந்து பேசலாம் - முஜாமலா. 2. நாட்டார் இலக்கியம் - ஏரூர் ஜிப்ரியா. 3. அழகியல் அம்சம் (ஓவியம், கைப்பணி) - ஸூபா. 4. மனம் திறந்து பேசலாம் - முஜாமலா.

புதன் தினங்களில் 1. மொழிபெயர்ப்புக் கவிதைகள் - மரீனா இல்யாஸ் ஷாபி. 2. சஞ்சிகை - சாமென் நிஸாம். 3. மருத்துவம் - னுச ஜலீலா முஸம்மில். 4. தொழில்னுட்ப அறிவியல் - சகீனா, லைலா அக்ஷயா.

வியாழக்கிழமைகளில் 1. நெஞ்சோடு நெஞ்சம் - ரமீனா ஐயூப். 2. கவிதை பேசுங்கள் வீடியோ - பர்ஹத் ரியா, ஹம்றா றியால். 3. கவிதை எடிட்டிங் (பேசும் பொற்சித்திரமே) - பாத்திமா சம்சுதீன், ராஜிலா ரிஜ்வான், ரம்ஸானா சமீல், சப்னா நஸீர். 4. கலக்கலாம் வாங்க - ரமீனா ஐயூப்.

வெள்ளிக்கிழமைகளில் 1. பயான் (வாராவாரம்) - கமர்ஜான் பீவி, பஹ்மியா ஷெரீப். 2. வரலாற்றுப் பெண்மணிகள் - பௌசுனா இஸ்ஸதீன். 3. இஸ்லாமிய கீதம் -லறீபா பதுர்தீன்.

சனிக்கிழமைகளில் 1. புதிய அங்கத்தவர்கள் அறிமுகம். 2. Book Bank (Book பற்றிய சிலாகிப்பு) - ஜெஸீனா பர்ஸானா. 3. இவ்வாரம் எனக்குப்பிடித்தவை - மர்ழியா சக்காப். 4. படித்ததில் ரசித்தது - மஹீஸா பானு, றிப்கா அன்சார். இவ்வாறு எமது முகநூல் பக்கத்தில், பல்சுவை நிகழ்ச்சிகள் தொடர்ந்து செல்கின்றன” என்றார்.











# தொலைவில் வெளிச்சம்......

செ. ரமேஸ் மதுசங்க
ஊடக கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தினக்கூலியில் திண்டாடும் நம்மவர் மத்தியில் சுயதொழில் செய்ய முனையும் சிலரின் மனப்பதிவுகளடனான பார்வை..

இறால் வளர்ப்பினை சீவனோபாயமாகக் கொள்ளும் புத்தளம் மாவட்டத்தின் சிலாப நகரின் கொட்டகை எனும் ஊருக்கு ஒரு களவிஜயம்.....

இறால் வளர்ப்பை சீவனோபாயமாகக் கொண்ட பண்ணை வளர்ப்பாளர்களின் துன்ப துயரங்கள் ஒன்றல்ல. பல துயரங்களின் மத்தியில் அறுவடையை பெற்றுக் கொள்ள போராடும் இப்பண்ணையாளர்களுக்கு உரிய சலுகைகள் சரிவர கிடைக்கின்றனவா? என்பதை சற்று அலசி ஆராய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

உள்ளூர் உற்பத்திகளில் மாமிச சந்தைக்கு அதிக கிராக்கி உண்டு என்பதை யாவரும் அறிந்ததே. அவ்வாறான இறால் வளர்ப்பில் போதிய முன்னேற்றம் காணாத இவ்வூர் பண்ணையாளர்கள் இறால் வளர்ப்பினை புறந்தள்ளும் நிலைக்கு ஆளாகி உள்ளனர். இறால் வளர்ப்பின் போது, முகம்கொடுக்க வேண்டிய தடைகள் எழுந்துள்ளன.

இறால் வளர்ப்பில் முதலில் பண்ணை சுத்திகரிக்கப்படும். பண்ணையில் உள்ள கழிவுகள் அகற்றப்பட்டு ஆற்று நீரின் மூலம் பண்ணை நிரப்பப்படும். பின் ‘nectar’ எனும் நிறுவனத்தின் pc-Report இன் மூலம் இறால் குஞ்சுகள் தரமானவை என நிரூபிக்கப்பட்டு பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும். பொதுவாக 3 அல்லது 4 மாதங்களில் இறாலின் நிறை சந்தைக்கு ஏற்ற எடையைக் கொண்டுள்ள போது அறுவடை மேற்கொள்ளப்படும்.

கொரோனா காலத்தில் பண்ணை வளர்ப்பை மேற்கொள்ள அதிக சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட வேளையில் பண்ணை வேலைகளை ஆரம்பிப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியாமல் போயிருந்தது. இறாலினை கொள்வனவு செய்யவும் இறாலுக்கான உணவினை பெற்றுக் கொள்ளவும் முடியாத தட்டுப்பாடு நிலவியுள்ளது. ‘nectar’ போன்ற இறால் உற்பத்தி நிறுவனத்திடம் இறாலினை கொள்வனவு செய்ய முடியாத ஒரு தட்டுப்பாடும் நிலவியுள்ளது.

அதனைவிட பாரியதொரு முதலீடும் பண்ணை வளர்ப்பிற்கு தேவை. தற்போதைய சூழலில் வங்கிக் கடன்களை உடனடியாக பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் வட்டிக்கு கடன் வாங்கி அம்முதலைக்கொண்டு பண்ணைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. போதிய முதலீட்டின் பற்றாக்குறையின் காரணத்தாலும் நுண்ணங்கித் தொற்றின் காரணத்தாலும் இறால்கள் இறந்து மடிகின்றன. இதனால் வட்டிக்கு கடன் பெற்றவர்களின் நிலை தான் என்ன என்பதை, ரவிச்சந்திரன் கூறிய போது,

“கடன் மூலம் பெற்ற முதலீட்டைக் கொண்டு, பண்ணைக்கான வேலைகளை ஆரம்பித்தேன். இறால் உணவு, மின்சாரக் கட்டணம் ஏனைய செலவுகளுக்குமே அப்பணம் கட்டுப்படியானது. மீண்டும் உடனடித் தேவையை ஈடுசெய்ய அதிக வட்டிக்குக் கடனைப் பெற வேண்டியிருந்தது. பண்ணைச் செலவைப் பார்க்கிறதா, கடனை அடைக்கிறதா, வட்டியைக் கட்டுவதா எனத் தெரியாமல் திண்டாட்ட நிலை தொடர்ந்தது. கடைசியில் இறாலுக்கு நோயத்தொற்று ஏற்பட்டது. கடன் கடன் கடன்....... என்ன செய்வான் கடன்கொடுத்தவன். வீட்டுக்கு வருவான்; சண்டை போடுறான். இவனும் எவ்வளவு காலம் பொறுப்பான். வீட்டுப் பத்திரத்தை அடகு வைக்கச் சொன்னான்” எனக் கூறினார்.

செல்வநாயகத்தின் கருத்துப்படி, “நாம் கொரோனா காலத்தில் அறுவடை செய்த இறால்களைச் சந்தைப்படுத்த முடியாமல் போனது. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி இல்லாத காரணத்தால், இறாலுக்கான சந்தை விலை குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இழப்பீடுகளும் அதிகம். எனவே சந்தையில் இறாலின் விலை அதிகரிக்கப்படல் வேண்டும்” எனக் கூறினார்.

சொந்தமாய் இறால் பண்ணை இல்லாதவர்கள், குத்தகைக்கு பண்ணையை வாங்குகின்றனர். அறுவடை முடிவில் பெறும் இலாபத்தை குத்தகைக்கும் இதர செலவுகளுக்கும் கொடுத்து, வெறும் கையுடன் திரும்புகின்றார்கள். கடன்கள் கழுத்தை நெருக்கும் போது, வெளிநாடு சென்று உழைக்கும் வழமையான நிலைக்கு வரவேண்டியுள்ளது.

அத்தோடு, இறால் வளர்ப்பை செவ்வனே மேற்கொள்ள, அதற்கான வளங்களும் சரியாக செப்பனிடல் வேண்டும். அதாவது, பண்ணையை அண்டிய ஆற்றுப்பள்ளத் தாக்குகளில் அதிக கழிவுப் பொருட்கள் காணப்படுகின்றன. அவற்றை முறையாக அகற்றி, ஆற்று நீரின் மட்டத்தை உயர்த்த வேண்டியுள்ளது.

ஆற்றில் அதிக களிமண் இருப்பதால், நிலத்தடி நீர் மேலெழுவதற்கான சாத்தியக்கூறுகள் அரிதாகவே காணப்படுகின்றன. இதனால் நீரின் மாசடைதல் காரணமாக இறாலிற்கு ஏற்ற நீரின் PH பெறுமானம் கொண்ட தூய நீரைப் பெற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

பண்ணையில் தேங்கியிருக்கும் கழிவு நீரை, வடிகால்கள் வழியே முறையாக வெளியேற்ற சிறந்த வடிகாலமைப்பும் இல்லை. இதனால் மக்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பலமுறை அரசாங்கத்திடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

செல்வந்தர்கள் கூலிக்கு ஆட்களை வேலைக்கு அமர்த்தி, பண்ணை வேலைகளைக் கண்காணிக்கின்றனர்.

பண்ணைக்குத் தேவையான pedalwheel மின்சாரம், மின் மோட்டார்கள் என்பவற்றை சிறிய தவனைக் கொடுப்பனவுக்கேனும் கொள்வனவு செய்து கொடுக்கும் திட்டம் ஒன்றை, அரசு அறிமுகம் செய்ய வேண்டும். இல்லையேல், அவற்றையும் குத்தகைக்கு வாங்குவதும் பழுதுகள் ஏற்படும் தருணத்தில் இரண்டு மடங்கு கொடுப்பனவைக் கொடுக்கும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

இவ்வாறான நெருக்கடியான காலத்திலும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நடவக்கைகள் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது.

பண்ணையாளர்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுத்து, தரமான இறாலுக்கான உற்பத்தியை ஏற்படுத்தி, சந்தையில் இறாலுக்கான கேள்வியை அதிகரிக்கும் கடமை அரசாங்கத்தை சார்ந்ததாகும்.

எனவே, சுயமுயற்சியாளர்கள் சொந்தக்காலில் நின்று, பொருளாதார ரீதியாக முன்னேற, பணம் ஓர் முக்கிய காரணியாகும். எனவே, பண்ணையாளர்கள் பணத்தைப் பெறுவதற்கான மாற்றுவழிகளை வங்கிகள் அறிமுகப்படுத்த வேண்டும். குறைந்த வட்டியில் உடனடிப் பணத்தை வழங்கும் திட்டங்களை வங்கிகள் அமல்படுத்த வேண்டும். நம்மவர் மத்தியில் முயற்சியுடையவர்களை ஊக்குவிப்பதன் மூலம் தன்னிறைவுப் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும்.

முயற்சிகளுக்கான தடையாக, போதுமான முதலீடு, மக்களுக்கு இல்லாமையே ஆகும்.

மக்களுக்கு சுயதேவைப் பொருளாதாரம் தொடர்பாக சரியான வழிகாட்டல்கள் கொண்டு சேர்க்கப்பட்டால், பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளுக்கு இடப்படும் தொடர்புள்ளிகள் முற்றுப்புள்ளிகளாகும் தூரம், வெகு தொலைவில் இல்லை என்பதே உண்மைநிலையாகும்.











# உயிர்காக்கும் பனைவேலிகள்



அ. அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தில், காட்டு யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல் நிலை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. மாவட்டத்தில் அதிக அளவில் தோட்டப்பயிர்களும் நெற்செய்கையும் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில், கூடுதலாகக் காடுகளை அண்மித்த இடங்களிலேயே, காட்டு யானைகளின் அச்சுறுத்தல் இருப்பது வழமை. ஆனால், அண்மைக் காலமாக, காடுகளையும் தாண்டி மக்கள் வாழும் கிராமங்களுக்கு உள்ளும் புந்து பலத்து, பலத்த சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் பொதுமக்கள், பெரும் அவஸ்தைப்படுவதுடன் பாரிய உயிர் அச்சுறுத்தலுக்கும் முகம்கொடுத்துக் கொண்டு, இரவு வேளையில் கண்விழித்து பாடாய்ப்படுகின்றனர்.


யானைகளின் பிரச்சினை, இன்று பூதாகரமாகி உள்ளது. அண்மைக்காலமாக, யானை தாக்கி பலர் உயிரிழந்துள்ளார்கள்; பலர் பலத்த காயங்களுக்கும் உள்ளாகி உள்ளனர்.

குறிப்பாக, மிகக் குறைந்தளவில் வருமானம் பெறும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள், தமது வாழ்வாதாரமாகத் தோட்டப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள், தமது கடும் உழைப்பைப் பயன்படுத்தி, நிலங்களில் வியர்வை சிந்தி, சிறிய தொகை வருமானத்தின் மூலம் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த நிலையில்,ஈ அவர்களது பயிர்கள், யானைகளால் அதிகளவு அழிக்கப்பட்டு வருகின்றன. அது மாத்திரமல்லாது, யானைகளின் தாக்குதல்களால் குடும்ப உறுப்பினர்களையும் இழந்து, பலர் நிர்க்கதியாகியுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிளிவெட்டி, தங்கநகர், குமாரபுரம், பாரதிபுரம், கங்குவேலி ,மேன்காமம், பெருவெளி , மல்லிகைத்தீவு, பள்ளிக்குடியிருப்பு, தங்கபுரம், கணேசபுரம், அம்மன் நகர் , கடற்கரைச்சேனை, சம்பூர் , இளக்கத்தை, இத்திக்குளம், இக்பால் நகர் , செல்வநகர், இறால்குழி மற்றும், வெருகல் பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட பூநகர், கருக்காமுனை, புன்னையடி , வாழைத்தோட்டம், இலங்கைத்துறை , உப்புறல், சீனன்வெளி உட்பட, கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சூரங்கல், பைசல் நகர், அண்ணல் நகர், மணியரசங்குளம், உப்பாறு, சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் ஆதியம்மன் கேணி, லிங்கபுரம் போன்ற பிரதேசங்களிலுள்ள கிராமங்களில், காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

குறிப்பாக, மூதூர் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் நிலைகொண்டுள்ள காட்டு யானைகளால், அப்பகுதி மக்கள் தொடர்ந்தும் இன்னல்களை எதிர்நோக்குவதுடன்,



தமது வாழ்வாதார முயற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலமைக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

கங்கைப்பகுதிகளை அண்டிய காடுகளில், பகலில் தங்கி நிற்கும் காட்டு யானைகள், இரவுவேளையானதும் அப்பகுதியிலுள்ள கிராமங்களுக்குள் புகுந்து, அங்குள்ள பயன் தரும் வாழை, தென்னை, மா, பலா, மரவள்ளி உள்ளிட்ட பயிரினங்களை அழித்துத் துவம்சம் செய்வதாக, அங்குள்ள மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.







இந்த யானைகள், வீட்டு மதில்களைக் கூட உடைத்து, சேதங்களை ஏற்படுத்தியுள்ளன. இது தொடர்பில், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு முறைப்படி அறிவித்தும், உரிய தீர்வு கிட்டவில்லை என்கின்றனர். பாதிப்புகளுக்கு உரிய காலப்பகுதியில், நஷ்ட ஈடும் வழங்கப்படுவதில்லை.

யானைகள் காடுகளை விட்டு வெளியேறும் முக்கிய இடங்களில் யானை வேலிகள் அமைக்கப்பட்டு இருந்தாலும், காட்டு யானைகளின் அட்டகாசம் குறைந்தபாடில்லை. சம்பூர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் கூட, இரவில் யானைகளின் நடமாட்டம் காணப்படுகின்றது.

இந்த நிலையில், யானைகளுக்கும் மனிதருக்கும் இடையிலான முரண்பாட்டைத் தடுக்கும் உயிர் வேலியாக, யானைத்தடுப்பு வேலியான பனை வேலி அமைத்தல் என்ற திட்டத்தை திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் தாபகர் கனகசபை தேவகடாட்சம், எதிர்காலப்பசுமை உலகின் செயலாளர் க. துஷ்யந்தன் ஆகியோர் முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி ஈச்சிலம்பற்று - பூநகர் பகுதியில் உள்ள பனிச்சம் குளக்கட்டோரத்தில் 1,200 பனை விதைகளை நட்டு, சுமார் ஒரு கிலோமீற்றர் தூரவேலிக்கான ஆரம்பப் பணியைத் தொடங்கி வைத்தனர்.

தொடர்ச்சியாக, யானை அச்சுறுத்தல் உள்ள பகுதிகளில், வேலி அமைத்து, தூரநோக்குக் கொண்ட நீடித்து நிலைக்கும் உயிர்ப்பல் வகையைப் பேணக்கூடிய இயற்கை நேயப் பண்பு கொண்ட, சிக்கனமான எவரும் இலகுவில் செயற்படுத்தக்கூடிய இத்திட்டத்தினை முன்னெடுக்க, இணைந்து செயற்பட, ஒத்துழைப்பு நல்க ஆர்வமுடையோர் தொடர்பு கொள்ளலாம் என இவர்கள் அறிவித்துள்ளனர். இவர்களின் இத்திட்டம் பாராட்டுக்கு உரியது.

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர், யானைகளை சரணாலயங்களுக்குகோ, மிருகக்காட்சிச்சாலைக்கோ கதிர்காமம் கோவிலுக்கோ சென்றுதான் பார்க்க வேண்டும். ஆனால், இன்றைய காலத்தில் யானைக்கூட்டங்கள், மக்கள் வாழும் கிராமங்களுக்குள் பிரவேசிக்கின்றன, இதற்கு பிரதான காரணங்களாக, புதிய குடியேற்றத் திட்டங்களும் காடழிப்பும் மணல் அகழ்வும் அமைகின்றன.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இறால் குழி கிராமத்திலும் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாதன் ஓடையிலும் மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால், இப்பகுதியில் ஆற்றங்கரை ஓரங்களிலுள்ள மரங்கள், நீரால் அடித்துச் செல்லப்படுகின்றன. அத்துடன், ஆறுகளிலுள்ள முக்கிய மீனினங்களும் அழிவடைகின்றன.

மாரிமழை காலங்களில், இப்பகுதிகளில் பெரு வெள்ளம் ஏற்படுகின்றது. இறால் குழி, வெருகல், மாவடிச்சேனை போன்ற பகுதிகள் வருடா வருடம் வெள்ளத்தில் மூழ்குவதுடன் யானைகளும் இப்பகுதிக்குள் வருகின்றன. இதனால், கிராமத்திலுள்ள வளங்கள் பெருமளவில் சேதமடைகின்றன. இயற்கைக்கு பங்கம் விளைவித்து, எதிர்காலச் சந்ததிக்கு சாவுமணியடிக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் வரட்சியான வானிலை நிலவும் காலப்பகுதியில் காடுகளில் வாழும் விலங்குகளும் உயிரினங்களும் உணவும் நீரும் தேடி கிராமங்களுக்குள் வருகின்றன. இதனாலும் மக்களின் வாழ்வாதாரங்களும் நிம்மதியும் பாதிப்படைகின்றன.

பொது மக்களையும் அவர்களது உடைமைகளையும் பாதுகாப்பது, சம்மந்தப்பட்ட அரச அதிகாரிகளின் கட்டாயக் கடமையாகும்.

நீண்டகாலமாக எதிர்கொண்டு வரும் யானைகளின் பிரச்சினைக்கு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வன இலாகா அதிகாரிகள், இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

சிறிய கிராமங்களில் வாழும் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் அவர்களின் உயிர் உடமைகளையும் பாதுகாப்பதற்கும் பாரிய அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டுள்ள இடங்களில் யானை வேலிகளை அமைத்துப் பாதுகாக்க வேண்டும். யானைகளால் இடம் பெற்றுவரும் அழிவுகளை, மேலும் தொடர விடாது தடுக்க வேண்டும். இம் மக்களின் துயரைத் துடைக்க, நிரந்தரத் தீர்வை வழங்க, அரச அதிகாரிகள் கரிசனை காட்ட வேண்டும். இனியாவது இவர்களின் துயரம் முடிவுக்கு வருமா...?

# வீடுகளின் விதி





சுப்பிரமணியம் பாஸ்கரன்

மழைக் காலம் தொடங்கி விட்டது; இனிவரும் நாள்களில் எவ்வாறு இந்தக் கொட்டில் வீடுகளில் குழந்தைகளையும் முதியவர்களையும் பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு, எப்படி இருக்கமுடியும் என்பதை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தெரிந்து கொள்வார்களா என, கடந்த 11 வருடங்களுக்கு மேலாகத் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வரும் மக்கள் கேள்வியெழுப்பி உள்ளனர்.

வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, மீள்குடியேறிய மக்களில் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள், வீடுகளின்றி தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வாழ்ந்துவரும் குடும்பங்கள், தற்போது பெய்து வரும் பருவமழையில் பெரும்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த மழைக்காலத்தில் மட்டுமல்ல, வரட்சி காலத்திலும் இந்த மக்கள் துன்பத்தையே எதிர்கொண்டு வருகின்றனர்.என்பதை தினமும் கண்ணால் காண முடிகின்றது

யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, யுத்தம் நிறைவடைந்து இயல்பு வாழ்க்கை திரும்பியிக்கின்ற காலத்திலும், இவர்களது வாழ்வு இப்படியே தான் இருக்கின்றது.

இவ்வாறு வீட்டுத்திட்டங்களின்றி, தற்காலிக வீடுகளில் வாழ்ந்துவருகின்ற மக்கள் கருத்துத்தெரிவிக்கும் போது, இந்த வருடத்தில் வீட்டுத்திட்டங்கள் தருவார்கள்; அடுத்த திட்டத்தில் தருவார்கள் என்று அடிக்கடி பதிவுகளைச் செய்வார்கள்.

அரசியல்வாதிகள் பலர் வந்து, “உங்களுக்கு வீட்டுத்திட்டங்களைப் பெற்றுத் தருகின்றோம்; பொருத்து வீடு வேண்டாம்; கல் வீடு வாங்கித்தருவோம்“ என்றார்கள். ஆனால், எதுவும் நடக்கவில்லை.

“எங்களின் வாழ்வு, விலங்குகளின் வாழ்வை விடக் கேவலமான வாழ்வாகிவிட்டது” என்கின்றனர்.

இவ்வாறு, வீடுகளுன்றி வாழ்ந்த பெரும்பாலான குடும்பங்களுக்கு கடந்த 2018, 2019 ஆம் ஆண்டுகளில், வீட்டுத் திட்டங்களை பெற்றுக் கொள்ளாத மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், எந்த வீட்டுக்கும் முழுமையான நிதி கிடைக்கவில்லை. முதற் கட்டம், இரண்டாம் கட்டம் ஆகிய பகுதிக் கொடுப்பனவுகள் மாத்திரமே கிடைத்துள்ளன என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த வீட்டுத் திட்டங்களை, குறிப்பிட்ட







காலத்துக்குள் நிறைவுறுத்த வேண்டும் என்ற அழுத்தம் காரணமாக, அதாவது பயனாளிகளுக்கு பிரதேச செயலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மக்கள் பிரதிநிதிகள் இந்த வீடுகளை விரைவாகக் கட்டி முடிக்க வேண்டுமென்று வழங்கிய அழுத்தங்கள் காரணமாக, அவர்கள் அந்த வீடுகளை அமைப்பதில் பெரும் சவால்களைச் சந்தித்தது மட்டுமல்லாது, அன்றாடம் உழைத்து உண்ணுகின்ற குடும்பங்கள், இந்த வீட்டுத் திட்டத்துக்காகப் பட்ட கஸ்டங்கள், அவர்களுடைய வார்த்தைகளிலிருந்து வலிகளாக உணரமுடிகின்றது

குறிப்பிட்ட காலத்துக்குள் வீட்டுத் திட்டத்தை நிறுத்த வேண்டும் என்ற காரணத்துக்காகத் தங்களிடம் இருந்தவற்றையும் விற்று, வங்கிகளில் கடன் பெற்று அதற்கு மேலாக நுண்நிதி நிறுவனங்களிடம் இருந்தும் பெருந்தொகையான கடன்களைப் பெற்று, இந்த வீடுகளைக் கட்டுவதற்கு கஸ்டங்களை எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆனால், இந்த வீடுகளுக்கு முதற்கட்ட கொடுப்பனவு, இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன.

இதனால், இந்த வீடுகள் இதுவரை முழுமை பெறாத நிலையில், இன்றுவரை காணப்படுகின்றன. இந்தப் பயனாளிகள், கடந்த மூன்று ஆண்டுகளாகக் கடன் சுமைகளோடும் வீடுகள் இன்றியும் வாழுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

இப்போது, சில நாள்களாக ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக, இந்த மக்கள் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதற்கான மிகுதி கொடுப்பனவுகள், ‘இன்று கிடைக்கும், நாளை கிடைக்கும்’ என்ற நம்பிக்கையோடு, மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆனால், நிதி கிடைக்கவும், இல்லை; வீடுகட்டி முடிக்கவும் இல்லை

கடந்த ஆண்டில், 2021ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கலந்துகொண்டு உரையாற்றிய போது, “2018ஆம் 2019ஆம் ஆண்டு காலப்பகுதிகளில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் மன்னார் மாவட்டத்தில் 2,691 வீடுகளும் வவுனியா மாவட்டத்தில் 2,678 வீடுகளும் மன்னார் மாவட்டத்தில் 1,313வீடுகளும் முற்றுப்பெறாத நிலையிலுள்ளன, இதற்காக 2987.53 மில்லியன் தேவைப்படுகின்றது என்றும் இதற்கான நிதியை விடுவித்து உதவ வேண்டும்” என்றும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் இதேபோன்று 5,147 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்காக 1,958 மில்லியன் ரூபாய் நிதி தேவையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நான்கு மாவட்டங்களிலும் 11ஆயிரத்து 829 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இவ்வாறு வீட்டுத்திட்டங்களை நம்பி, குடியிருக்க முடியாத தற்காலிக கொட்டகைகளில் அதிக வெயிலிலும் மழையிலும் நிம்மதியாக வாழமுடியாத குடும்பங்களுக்கு வீடுகள் என்பது, இன்று மிக முக்கியமான தேவையாகவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் சனிக்கிழமை, 13 நவம்பர் 2021, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.